விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 12 முஹற 2 இதழ் 226
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-9-84

★ யாழ். தீயணைக்கும்படை

## சுங்கத்தீர்வு விதிவிலக்கு: முயற்சி பலனளிக்கவில்லை!

### மேலும் ரூபா 4 லட்சம் தேவை படுகிறது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாநகர சபையினர், லண்டனிலிருந்து கொள்முதல் செய்யவுள்ள தீயணைக்கும் படைக்கருவியை சுங்கத் தீர்வையிலிருந்து விதிவிலக்கு அளிக்க யாழ்.மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. சிவஞானம் எடுத்த முயற்சி பயனளிக்கவில்.

தீயணைக்கும் படைக்கருவிக்கு சுங்கத்தீர்வை நீக்கும் முயற்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து மேலும் நான்கு லட்சம் ரூபா தேவைப்படும் என்று ஆணையாளர் திரு. சிவஞானம் தெரிவித்தார்.

தீயணைக்கும் படைக்கருவியை இறக்குமதி செய்வதற்கு சுங்கத்தீர்வையாக மட்டும் சுமார் 4 லட்சம் ரூபா செலுத்த வேண்டியேற்படும் எனக் கூறப்படுகிறது

சுமார் 17 லட்சம் ரூபாவிற்கு லண்டனிலிருந்து தீயணைக்கும் படைக் கருவியைக் கொள்முதல்செய்ய முடிவு செய்யப்பட்டது. தற்போது சுங்கத் தீர்வையும் சேர்த்து 21 லட்சம் ரூபா தேவைப்படுமெனக் கூறப்படுகிறது.

ஏற்கனவே பொதுமக்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் பல்வேறு துறையினரிடமிருந்து தீயணைக்கும் படைக் கருவிக்கு நிதிஉதவி கிடைத்துள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க

# இலங்கை மீது இந்தியா படைஎடுக்க திட்டமாம்!

## பாரத சஞ்சிகை 'சூரியா' வெளியிட்ட தகவல்!!

(புதுடில்லி)
''இலங்கை மீது படையெடுக்க இந்தியா திட்டமிட்டுள்ளது! இந்தியாவின் மூன்ருவது ஒற்றர் அமைப்பு, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அங்கீகாரத்துடன் படையெடுப்புத் திட்டத்தை தயாரித்து வைத்திருக்கிறது'' என்று இந்தியாவிலிருந்து வெளிவரும் 'சூரியா' என்ற சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

'சூரியா' என்னும் சஞ்சிகை மூன்றுவருடங்களுக்கு முன்னர் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் மருமகள் திருமதி மேனகா காந்தியின் சொந்தமாக இருந்தது. இப்போது. முன்னுள் சிந்தி மகாராணியார் நிதி உதவியுடன், டாக்டர் அக்குரூே என்பவரை நிர்வாகியாகக்கொண்டு இயங்குகிறது.

இவர் பாரதீய ஜனதா கட்சியோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

'சூரியா' சஞ்சிகை வெளியிட்டுள்ள கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கைமீது ராணுவத் தாக்குதல் மேற்கொள்ள இந்திய அரசு எடுத்துள்ளதாகக் கூறப்படும் திட்டத்துடன் மூன்ருவது அமைப்பு சம்பந்தப்பட்டிருக்கிறது.

(5ம் பக்கம் பார்க்க)

யாழ். இந்துமகளிர் கல்லூரி

## இரசாயனகூடத்தில் இரவுநேரத்தில் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]
யாழ். இந்து மகளிர் கல்லூரியிலுள்ள இரசாயன கூடம் உடைக்கப்பட்டு, இரசாயனப் பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன

நேற்று முன்தினம் இரவு இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது

இனந்தெரியாத 9 நபர்கள் மேற்படி கல்லூரிக்குள்புகுந்து காவலாளியைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்திவிட்டு பெறுமதியான இரசாயனப் பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக யாழ். பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (மா)

பண்டத்தரிப்பில்
(பண்டத்தரிப்பு
மாவிட்டபுரம் நிருபர்கள்)

(10-ம் பக்கம் பார்க்க)

## இடைத்தேர்தல்களில் 90 வேட்பாளர்கள்!

(கொழும்பு)
மின்னேரியா, குண்டசாலை இடைத் தேர்தலில் போட்டியிட 90 வேட்பாளர்கள் நேற்று வேட்புமனு நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

மின்னேரியாவில் 51 வேட்பாளர்களும், குண்டசாலையில் 39 வேட்பாளகர்ளும் போட்டியிட நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளனர்.

ஐ. தே. கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா மக்கள கட்சி ஆகிய மூன்று அரசியல் கட்சிகளே இத் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஏனையோர் சுயேச்சை வேட்பாளர்களாவர்.

பாராளுமன்றத் தேர்தலில் இம் முறையே ஆகக் கூடுதலான வேட்பாளர்கள் போட்டியிடுவதாக தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்தா டி சில்வா தெரிவித்தார். (வெ)

### பொற்கோயில் சீக்கியரிடம் ஒப்படைப்பு!

(புதுடில்லி)
பஞ்சாப்பிலுள்ள சீக்கியர்களின் அமிர்தசரஸ் பொற்கோயிலை இந்திய ஜனதிபதி திரு. ஸெயில்சிங் நேற்று சீக்கியத் தலைவர்களிடம் ஒப்படைத்தார்.

இப்பொற்கோயில் இதுவரை இராணுவத்தின் வசமிருந்து வந்தது. (வெ)

## வங்கி பாதுகாப்பாளர் சுட்டுக் கொலை!

(மட்டக்களப்பு)
செங்கலடி இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினமிரவு சுட்டுக்கொல்லப்பட்டார்!

பொ. கோணேஸ்வரன் (28 வயது) என்பவர், ஏருவூர் பொலிஸ் நிலையத்தில் முன்னர் பொலிஸ் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றியவர். பின்னர் இவர், செங்கலடி இலங்கை வங்கியில் பாதுகாப்பு உத்தியோகத்தராக பணியாற்றி வந்தார்.

வந்தாறு மூலையைச் சேர்ந்த இவர் நேற்று முன்தினமிரவு கடமை முடிந்து, வந்தாறு மூலை உப்போடை வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது, இனம் தெரியாத துப்பாக்கிநபர்களினுல் சுடப்பட்டதாகவும், ஸ்தலத்திலேயே மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

● பிள்ளைகளை ஒப்படைக்குமாறு கோரி

## முல்லைத்தீவு கச்சேரி: தாய்மார் முற்றுகை!

(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 தாய்மார்கள் நேற்றுக்காலை முல்லைத்தீவு கச்சேரிக்கு வந்து தங்கள் பிள்ளைகளை மீட்டுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் முல்லைத்தீவு சம்பவங்கள் தொடர்பாக மேலிடத்துடன் நேரில் பேச்சுவார்த்தை நடாத்த நேற்றுமுன்தினம் கொழும்பு சென்றுவிட்டார்.

இதனுல் தாய்மார்கள், உதவி அரசாங்க அதிபரிடம் தங்கள் கோரிக்கையைத் தெரிவித்தனர்.

கச்சேரிக்கு வெளியிலும்,

(5- ம்பக்கம் பார்க்க

அக். 25-ல்

### மின்னேரியா, குண்டசாலை இடைத் தேர்தல்

[கொழும்பு]
மின்னேரியா, குண்டசாலை தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் அடுத்த மாதம் 25ம் திகதி நடை பெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

## கலாவதியின் கணவருக்கு திருச்சபை நிதிஉதவி

(யாழ்ப்பாணம்)
கரணவாயில் குண்டுக்குப் பலியான கலாவதியின் இல்லத்தைக் கத்தோலிக்கத் திருச்சபையினர் சென்று பார்வையிட்டதுடன் இச்சம்பவத்தின் போது காயமடைந்த கலாவதியின் கணவர் தங்கத்துரைக்கு ஆயிரம் ரூபா அன்பளிப்பும் வழங்கினுர்கள்.

இத்தகவலை தங்கத்துரையின் சகோதரரான த. செல்லத்துரை தெரிவித்தார்.

இரண்டு வான்களில் சுமார் 14 பேர் வந்ததாகவும், இதில் தென்னிலங்கையிலிருந்து வந்த சிலரும் இருந்ததாகவும். குண்டுகள்பட்ட பனைமரங்களையும், வீட்டையும் அவர்கள் பார்வையிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டுப் பெண் நிருபர் ஒருவரும் இடங்களைப் பார்வையிட்டுச் சென்றதாகவும் அவர் கூறினுர். (க)

## கிராமம் கிராமமாக வீடுகளில் சோதனை!

(யாழ்ப்பாணம்)
முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று 45 இளைஞர்கள் ஆயுதப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டதாக முல்லைத்தீவு கச்சேரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது

பெற்றோர் வந்து கச்சேரியிலுள்ள விசேட பத்திரங்களில் தங்கள் பிள்ளைகள் பற்றிய விபரங்களை எழுதி வருகின்றனர்

கிராமம் கிராமமாகத் தினமும் வீடுகளில் சோதனைநடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது

கொழும்பு சென்றுள்ள முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரன்

[10ம் பக்கம் பார்க்க]

### அரசஅதிபர் கொழும்பு சென்றார்

(யாழ்ப்பாணப்)
யாழ். அரசாங்க அதிபர் திரு எம் பஞ்சலிங்கம், உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு சென்றுள்ளார். (மா)

# அரி ஆளம்பரம்

## விற்பனைக்கு

நஷனல் NR-195 TZC குளிர் சாதனப்பெட்டி, நீளம் 20'' உயரம் 44'' புதியது ஒற்றைக் கதவு உடன் விற்பனைக்குண்டு. இம்மாதம் 29ம், 30ந் திகதிகளில் பார்வையிடலாம் எம். நமசிவாயம் சேர்ச் லேன், மல்வம் உடுவில்; 1976

---

புத்தம்புதிய Belling Cooker 4 Burners, Oven, Grill உடையது விற்பனைக்கு அல்லது கார், கலர் T V, வீடியோ டெக் உடன் பகுதி மாற்றத்திற்கு. சொனிக் வீடியோ சென்ரர், சந்தைக்கு அண்மையில் மானிப்பாய். 1958

---

முல்லைத்தீவில் P. W. D. ரோட்டில் இருக்கும் நல்ல நிலையில் உள்ள சகல வசதிகளையும், ஐந்து அறைகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. 5-10-84 க்கு முதல் தொடர்பு கொள்ளவும், தொடர்பு: சூ. அருளானந்தம், 874, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1959

---

இல: 33 ஸ்ரீ 4521 ஒஸ்ரின் வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல: 5, மூளுமலை ஒழுங்கை, மானிப்பாய்.
1983

---

கோண்டாவில் மேற்கு, K. K. S. ரோட், சந்திக்கு அருகாமையில் 2½ பரப்புக் காணியும் கட்டிடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 116, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 1932

## தேவை

ஆர்.வி.ஜி. பீடி தயாரித்துத் தரக்கூடிய ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது. விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும் நிர்வாகம், ஆர். வி.ஜி பீடி, ஸ்தாபனம், 275, பீச்ரோட், யாழ்ப்பாணம்.
1941

---

நல்லரக பனை ஓலைச் சார்வு தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 1988

---

நல்ல அனுபவமுள்ள, நற்பழக்கமுள்ள பாண் தயாரிப்பாளர்கள், உதவியாளர்கள், விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை. இருப்பிடவசதி சாப்பாட்டு வசதி, திறமைகளுக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் தொடர்புகொள்ளவும். K. நாதன், முருகன் பேக்கரி, M P.C.S. முன்பாக நீர்வேலி. 1989

---

தொழிற்சாலையில் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்று பணிபுரிவதற்கு 14 - 18 வயதுக்குட்பட்டவர்கள் தேவை. பயிற்சிக் காலத்தில் ஊதியம் வழங்கப்படும். தகுந்த நற்சான்று விபரத்துடன் விண்ணப்பிக்கவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.
1986

## குத்தகைக்கு

யாழ்ப்பாணத்தில் பலவித பொருட்களும் துரித விற்பனையாகிக் கொண்டிருக்கும் கடை குத்தகைக்கு கொடுக்க இருக்கிறது. விபரங்களுக்கு: 104/1 அத்தியடி குறுக்கு வீதி, பிள்ளையார் கோயில் முன்பாக யாழ்ப்பாணம்.
1956

## தவறிவிட்டது

சட்டநாதர்கோவில் வீதிக்கும் முடமாவடிச் சந்தி, திருநெல்வேலி சென்றல் நேர்சிங்கோமிற்குமிடையில் எனது அடையாள அட்டை (642670506 V) கறுப்பு பேசுடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ப. பாலறஞ்சன், 109/3, சட்டநாதர் வீதி, கல்வியங்காட்டில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 1984

---

30-8-84இல் யாழ்ப்பாணத்தில் எனது அடையாளஅட்டை (ஆ. அமிர்தலிங்கம், தங்கோடை, காரைநகர்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 1980

## பயிற்சிகள்

ரெலிவிசன், வீடியோடெக் றிடபியறிங், Computer Programming எலக்ரிக்கல் வயறிங், றீவைண்டிங், Hotel management, French, German பயிற்சிகள் இரண்டு மாத செய்முறைப் பயிற்சி உட்பட நடைபெறுகின்றன. ஆரம்பம்: 05-10-84. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்
1974

---

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய

## அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

பண்டத்தரிப்பு என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்,

—மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல/ரி. 203

கணபதிப்பிள்ளை முத்துக்குமாரு கைம்பெண் யசோதராதேவி. இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு

எதிராக மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 19 4ம் ஆண்டு ஐப்பசி மாதம் (10-10-1984) 10-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைவு:
க.குணரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி
1964

## வவனியாவில் அரிசிவிலை வீழ்ச்சி

(வவனியா)

வவனியாவில் அரிசியின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது அரிசிவிலை வீழ்ச்சி அடைந்திருப்பதனால் இங்குள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

---

108, BROWN ROAD, JAFFNA.

### 85 A/L

### இரசாயனம் மீட்டல்

ஆசிரியர்: சத்தீஸ்
முழுப் பாடத் திட்டமும் முடிக்கப்படும்.
பிரிவு A: காலை நேர வகுப்பு (கிழமை நாட்களில்) 7-00 a. m.
ஆரம்பம்: 1-10-84
திங்கள் 7-15 a. m.
பிரிவு B: மாலை நேர வகுப்பு (திங், செவ், வியா) (4-15 p. m.)
ஆரம்பம்: 1-10-84
திங்கள் 4-15 p. m.
(1972)

---

### A/L 85

DAY CLASS
ஆரம்பம்: 1-10-84
பிரிவு: I
8-00; காவிகள்
9-00; திரிகோண கணிதம்
பிரிவு II:
10-30; தொடர்புவேகம்
11-30: நுண்கணிதம்

### A/L 86

சனி, ஞாயிறு வகுப்பு
ஆரம்பம்: 29-9-84
10-00: காவிகள்
11-30: மீதித்தேற்றம்
ஆசிரியர்;
Ravimohan,
JAFFNA.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)
(1990)

---

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

நல்லூர் இந்துவிடுதிக்கு தெற்குப் புறமாகவுள்ள நாலுகடைகள், குருநகர் சந்தைமேல்மாடி உட்புறக்கடை இல: 64 ஆகியவற்றை 1-11-84ம திகதி முதல் 5 வருடங்களுக்கு குத்தகைக்கு கொடுப்பதற்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 12-10-84ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள் யாழ். மாநகராட்சிமன்றத்தினால் 11-10-84ம் திகதி வியாழக்கிழமை மாலை 2-30 மணிவரை வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு அடையாள அட்டை அல்லது கிராம சேவையாளர் வதிவிடசான்றிதழைச் சமர்ப்பித்து கேள்விப் படிவக் கட்டணமாச் ரூபா 50/ம் கேள்வி பிணையாக ரூபா 1500/-ம் செலுத்துதல் வேண்டும்.

3 இக்கேள்விகள் சம்பந்தமான இதர விபரங்களை மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி
மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
25-9-84. 1982

# பொலிஸாருக்கு உதவியவர்? அழுகிய நிலையில் சடலம் மீட்பு!

(மன்னார்)

கசிப்பு உற்பத்தியைத்தடை செய்வதற்கு பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்கிய 34 வயது இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

பேசாலையைச் சேர்ந்த எமிவியான் றூபஸ் என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

இவரது சடலம் அழுகிய நிலையில் பேசாலையைச் சேர்ந்த அறுகம்பிட்டி என்றகாட்டில் புதைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு மன்னார் பொலிசார் மீட்டனர்.

பொலிசாரினால் மீட்கப்பட்டவரின் சடலத்தை கொலை செய்யப்பட்டவரின் சகோதரன் எஸ். திருக்குடும்பதாசன் குறுப், மைத்துனர் செபமாலை திவ்வியநாதன் குரூஸ் ஆகியோர் அடையாளம் காண்பித்தனர்.

இக்கொலை தொடர்பாக நடைபெற்றமரண விசாரணையின் போது கொலை செய்யப்பட்டவரின் மனைவி றூபஸ் செபமாலை பாய்பா சாட்சியமளிக்கையில்,

'எனது கணவர் பேசாலைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்பவர்கள் பற்றி பொலிசாருக்கு அடிக்கடி தகவல்கள் கொடுத்துவந்தார். இதனால் கசிப்பு உற்பத்தியாளர்கள் என் கணவன் மீது கோபமாக இருந்தனர்.

'கடந்த 15-8-84 இரவு வீட்டுக்கு வந்த எனது கணவர் இரவு சாப்பிட்டுவிட்டு அலுமாரியிலிருந்த ரோச் லைட்டை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியே சென்றார். அன்று சென்றவர் பல நாட்களாகியும் வீடு திரும்பாததால் பொலிசில் புகார் செய்திருந்தோம்.

இறுதியில் எனது கணவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஊர்பொது மக்கள் தேடுதல் நடத்திய போது எனது கணவர் கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டிருந்தது.'

இக்கொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்ட மன்னார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. திருச்சிற்றம்பலம் சார்ஜண்ட் வேலாயுதபிள்ளை, கான்ஸ்டபிள் துரைசிங்கம் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் மத்தியஸ் இன்பம், நிசார் ஆகிய இருவரை கைதுசெய்ததுடன் தலைமறைவாகியுள்ள வீரா என அழைக்கப்படும் பி விக்கிரமசிங்கம் என்பவரையும் தேடி வருகின்றனர். சடலத்தை மன்னார் வைத்திய அதிகாரி செல்வி குமாரசாமி பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தார்.

மரணவிசாரணை நடத்திய மன்னார் பதில் நீதவான் ஜனாப் அபுதாஹிர் கொலையென தீர்ப்பளித்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மறுவிசாரணை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார.

---

நவராத்திரிவிழாவை முன்னிட்டு எம்மிடம் ஸ்ரீசக்கரம் மற்றும் சகலவிதமான சுவாமி பென்ரன்களும் தங்கம், பவுண், வெள்ளி தாம்பரம் முதலியவற்றில் தயாரித்து கொடுக்கப்படும்.

தயாரிக்கும் இடம்
174, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.
(1985)

---

## கிராம அ.சங்க கூட்டம்

(சுன்னாகம்)

ஏழாலை தெற்கு மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இம்மாதம் 30ம் திகதி பிற்பகல் ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

வலி-தெற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு.ஏ.சி.செபநாயகம் தலைமையில் நடை பெறவிருக்கும் இக் கூட்டத்தில் புதிய யாப்புக் கமைய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

---

## இன்று திருநாள்

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலய வருடாந்த திரு நாள் இன்று 28ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 7ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பலிப்பூசையும் தொடர்ந்து மாதாவின்- சுரூப சுற்றுப் பிரகாரமும் இடம் பெறும்.

---

## லேத் இயக்குநர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநர் (LATHEMAN) தேவை.
நேரில் வரவும்
தகுதிக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
உடனே தொடர்பு கொள்ளவும்.

**சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்,**
நீர்வேலி.
(1937)

---

## விற்பனைக்கு

7 சிறீ மொறிஸ் ஒக்ஸ்போட் இரண்டு
8 சிறீ மொறிஸ் ஒக்ஸ்போட் இரண்டு
7 சிறீ வொக்ஸ் வகென், 9 சிறீ வோக்ஸ் வகென்,
8 சிறீ வோக்ஸ் வகென், 1 சிறீ A/50 ஒஸ்டின் கேம்பிறிட்ஜ்,
8 SRI 404 PEUGEOT, 12 SRI 404 PEUGEOT,
8 SRI FORD CORTINA, மொறிஸ்மைனர் மற்றும்
13''OLIVETTI PORTABLE TYPEWRITER,
EXECUTIVE BURMA TEAK OFFICE TABLE,
32 BASE PIANO ACCORDIAN
பிரதி சனிக்கிழமை பார்வையிடலாம்.

தொடர்பு கொள்ளவும்
**குயிக்ஸ் என்ரபிறைசஸ்**
533, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# 1997-ம் ஆண்டில் ஹொங்கொங்கை சீனாவிடம் மீண்டும் கையளிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்து!

## கம்யூனிஸ்ட் கொள்கைகள் திணிக்கப்படமாட்டாது

பீஜிங், செப் 27

ஹொங்கொங்கை மீண்டும் சீனாவிடம் கையளிக்கும் ஒப்பந்தத்தில் பிரிட்டன் நேற்று பீஜிங்கில் கைச்சாத்திட்டது. இதனையடுத்து 1997ம் ஆண்டில் ஹொங் கொங் மீதான ஆட்சியுரிமையை சீனா பெற்றுக்கொள்ளவுள்ளது. கடந்த 143 வருடகாலமாக ஹொங்கொங் பிரிட்டனால் குத்தகை அடிப்படையில் நிர்வகிக்கப்பட்டுவந்தது.

பிரிட்டனின் சார்பில் சீனாவுக்கான பிரிட்டிஷ் தூதுவரும், சீனாவின் சார்பில் உதவி சீனவெளிவிவகார அமைச்சரும் இந்த ஹொங்கொங் ஒப்பந்தத்தில் நேற்று பீஜிங்கில் கைச்சாத்திட்டனர். இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வைபவத்தில் சீன, பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

1841ம் ஆண்டு முதல்கடந்த 143 வருடகாலமாக சீனப் பெரும் நிலப்பரப்பின் ஒருபகுதியாகவிருந்த ஹொங்கொங், பிரிட்டனால் குத்தகைக்குப் பெறப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது.

1982ம் ஆண்டு பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி. மார்கிரெட்தட்சர் சீனாவுக்குச் சென்றிருந்தார். அவரின் அவ்விஜயத்தின்போது ஹொங்கொங்மீதான பிரிட்டனின் குத்தகைக் காலம்முடிவடைகையில் அதனைமீண்டும் சீனாவிடம் ஒப்படைக்கும்படி சீனா கேட்டுக்கொண்டது.

### ஜெவ்ரிஹொவ்வின் முயற்சி

இக்கோரிக்கை பிரிட்டிஷ் அரசாங்கத்தினால் நன்கு பரிசீலிக்கப்பட்டபின்னரே மீண்டும் சீனாவிடம் ஹொங்கொங்கை கையளிக்கபிரிட்டன் சம்மதித்தது. பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சேர் ஜெவ்ரி ஹொவ், சீனாவிடம் ஹொங்கொங்கை கையளிக்கும் விடயத்தில் இருநாடுகளையும் சுமுகமான உடன்பாடொன்றுக்கு வரச்செய்வதில் ராஜதந்திரரீதியில் குறிப்பிடத்தக்கவகையில் செயலாற்றினார். இவர் இருமாதங்களுக்கு முன்னர் சீனாவந்து சீன அரசாங்க உறுப்பினர்களையும் இவ் உடன்படிக்கை சம்பந்தப்பட்டபல விடயங்களில் இணங்கச்செய்திருந்தார்.

### சுயமானபகுதி

1997ம் ஆண்டில் ஹொங்கொங் சீனாவினால் பொறுப்பேற்கப்படவிருக்கின்றபோதிலும், சீனாவின் கம்யூனிஸ்ட் கொள்கைகள் ஹொங்கொங்

(7ம் பக்கம் பார்க்க)

## அவலக் குரல்கள்

(பச்சிலைப்பள்ளி)

கொழும்பு-யாழ். பஸ் திசை திருப்பப்பட்டு வவனியா மன்னார் - ரோட்டில் 15 பேர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட இடத்தில் இரவுநேரங்களில் அவலக் குரல் சத்தங்கள் கேட்கின்றதாம்.

இதனால் அயற்பகுதிகளிலுள்ள மக்கள் பெரும் பீதியடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

## இந்திய ஜனாதிபதிமீதான மதத்துரோகக் குற்றச்சாட்டு வாபஸ்!

அமிர்தசரஸ். செப், 27

இந்திய ஜனாதிபதி திரு. ஜியானி ஸெயில் சிங் மீதான சீக்கிய உயர் மதபீடத்தின் மதத்துரோகக் குற்றச்சாட்டு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

சீக்கிய உயர் மதகுரு ஒருவர் இக்குற்றச்சாட்டை நேற்று வாபஸ் பெற்றுக்கொண்டார். ஜூன் மாதம் அமிர்தஸரஸ் பொற்கோயில் வளாகத்தினுள் இந்திய இராணுவம் புகுந்ததையடுத்து திரு ஸெயில் சிங் மீது மதத் துரோகக் குற்றம் சீக்கிய உயர் மதபீடத்தினால் சுமத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் பொற்கோயிலிருந்து இந்திய இராணுவம் வாபஸ்பெறப்படும் என்று அறிவிக்கப்பட்டதையடுத்தே இக்குற்றச்சாட்டு வாபஸ் பெறப்பட்டது.

இந்த வாபஸையடுத்து ஜனாதிபதி ஸெயில் சிங் மீது அக்குற்றச்சாட்டுத்தொடர்பாக சீக்கிய மதபீடம் எடுக்கவிருந்த மேல் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

ஜனாதிபதி திரு. ஜியானி ஸெயில் சிங்கின் பெயருடன் இணைந்துள்ள 'ஜியானி' என்ற சொல், அவரது சீக்கிய மதத்தினால் வழங்கப்படும் ஒரு பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## இலங்கைத் தமிழர் பிரச்னை

## இந்திய அமெரிக்க உயர் அதிகாரிகள் பேசினர்!

(வாஷிங்டன்)

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. ரங்கோத்தாவும், அமெரிக்க வெளியுறவு துணை அமைச்சர் திரு.றிச்சார்ட் அல்மாகார்குஷவும் நீண்ட நேரம் பேச்சுக்கள் நடாத்தினர். ஐக்கிய நாடுகள் சபையின் 39 வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்ற ரங்கோத்தா நியூயோர்க்கில் இப்பேச்சுவார்த்தையை நடாத்தியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையில்திரு. ரங்கோத்தா "இலங்கையில் தமிழர் பிரச்னை மிகவும் மோசமடைந்துள்ளதாகத் தெரிகிறது.

இலங்கைப் பிரச்னையில் விரைவில் தீர்வு காணப்படவேண்டுமென்றுஇந்தியாவிரும்புகின்றது. இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா நடாத்திய அனைத்துக் கட்சி மகாநாட்டிலும் தீர்வு காணப்படுவதற்கான சூழ்நிலை இல்லை. இதற்கிடையில் தொடர்ந்து தமிழர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள்" என்றார்.

"தமிழர்களுக்கு எதிரான நிலையை இலங்கை அரசு மாற்ற வேண்டும்

தமிழர்களை வேட்டையாட இராணுவத்துக்கு விசேட பயிற்சியளிக்கப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது. தமிழர் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காணப்படவேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கம்" என்றும் அமெரிக்க துணை அமைச்சரிடம் அவர் விளக்கினார். (கெ)

## மீனம்பாக்கம் குண்டுவெடிப்பு

## சந்தேகநபர்களுக்கு பிணை மறுப்பு!

### விரைவில் குற்றப் பத்திரம் தாக்கல்!!

சென்னை, செப் 27,

மீனம்பாக்கம் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களுக்கு பிணைவழங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

இம் மூன்று சந்தேகநபர்களும் செங்கல்பட்டு நீதிமன்றில் தம்மைப்பிணையில் விடும்படி விண்ணப்பித்திருந்தனர். ஆனால் அரசதரப்பின் ஆட்சேபனையையடுத்து நீதிபதி பிணைவழங்க அனுமதி மறுத்துள்ளார்.

"விரைவில் மீனம்பாக்கம் குண்டுவெடிப்புச்சம்பவம் தொடர்பாக குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படவிருப்பதால் சந்தேகநபர்களை பிணையில் செல்ல அனுமதிக்ககூடாது" என்று அரசசட்டத்தரணி நீதிபதியிடம் கேட்டுக்கொண்டார்.

பதினொரு சந்தேகநபர்கள் மீனம்பாக்கம்குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள்மீதான குற்றப்பத்திரங்கள் இன்னும் ஒருமாத காலத்தில் தாக்கலாகும் என்று பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எம் ஜி. ஆர். மீது கருணாநிதி வழக்கு!

(சென்னை)

தன்மீது பழி சுமத்தும்வகையில் அமைந்த செய்திகளை அரச பத்திரிகைகள் வெளியிட்டமைக்காக தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன், செய்தித் துறை இயக்குநர் ஆகியோர் மீது வழக்குத்தொடரவுள்ளார்.

திரு. கருணாநிதி ஆளுநருக்கு எழுதிய கடிதமொன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இம்மாதம் 11ம், 14-ம் திகதிகளில் தமிழக அரச பத்திரிகைகள் சில என்மீது பழி சுமத்தும் அவதூறான செய்திகளைப் பிரசுரித்திருந்தன" என்று அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். (சு)

## ஹோம் பினான்ஸ் லிமிட்

யாழ்ப்பாணம் / கொழும்பு / யாழ்ப்பாணம்

மீண்டும்

**'பகல் பஸ் சேவை'**

**ஆரம்பம் 28/9/84 முதல் (வெள்ளி)**

புறப்படும் இடம் : கன்னாதிட்டி சந்தி.
புறப்படும் நேரம் : [illegible]-30 மணி

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பதிவு செய்யுமிடங்கள் :**

1. ஹோம் பினான்ஸ் லிமிட், கன்னாதிட்டி தொலைபேசி : 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர், ஆஸ்பத்திரி வீதி தொலைபேசி : 23596
3. நியூ ப்ரசீதா, ஆஸ்பத்திரி வீதி. தொலைபேசி : 22480
4. (1-10-84 முதல்) அன்னராஜா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி. தொலைபேசி : 22608

**கொழும்பில் :**

1. ஹோம் பினான்ஸ் லிமிட், பம்பலப்பிட்டி. தொலைபேசி : 58190
2. டையமன் ஸ்ரோர்ஸ், வெள்ளவத்தை தொலைபேசி : 82978

புறப்படும் நேரம் : 7-00 மணி

பி குறிப்பு : போதிய பாதுகாப்பு இன்மையால் இரவு பஸ்சேவை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

## 95 சதவீதமான அணுஆயுதங்கள் அமெரிக்காவும், சோவியத்தும் வைத்திருக்கின்றன

### சீன வெளிவிவகார அமைச்சர் தகவல்!

நியுயோர்க், செப். 27

"உலகில் 95 சத வீதமான அணு ஆயுதங்கள் சோவியத் யூனியனிடமும், அமெரிக்காவிடமுமே இருக்கின்றன. அணு ஆயுதப்போர் ஒன்று ஏற்படுமானால் அது இவ்விரு நாடுகளுக்கிடையிலேயே வெடிக்கும்."

இவ்வாறு சீன வெளிவிவகார அமைச்சர் திரு வூ தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 39-வது பொதுக்கூட்டத் தொடரில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்

திரு வூ மேலும் கூறியதாவது:-

"அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியன அணு ஆயுத உற்பத்திகளைக் குறைக்கவேண்டும் இவ்விரு நாடுகளும் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டு

(7ம் பக்கம் பார்க்க)

## நியூயோர்க் தென்னாபிரிக்க தூதரகத்தில்குண்டுவெடிப்பு

நியூயோர்க், செப் 27

நியூயோர்க்கிலுள்ள தென்னாபிரிக்காவின் துணை தூதராலயத்தில் பெரும் குண்டு வெடிப்பொன்று நேற்று நிகழ்ந்தது.

இத் தூதராலயக் கட்டிடம் நியூயோர்க்கில் 33 அடுக்குகளைக் கொண்ட ஒரு தொடர் மாடிக் கட்டிடத்தின் 12வது மாடியிலேயே அமைந்துள்ளது

இம்மாடியிலும் இக் கட்டிடத்தின் அடித்தளத்திலுமே நேற்றுக் குண்டு வெடித்தது பல குடியிருப்பாளர்கள் தங்கியுள்ள இக்கட்டிடத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து எதுவும் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை

தென்னாபிரிக்க அரசின் இன ஒடுக்கலுக்கெதிரான பெயர் குறிப்படாத இயக்கமொன்று தானே இக் குண்டு வெடிப்புக்குப் பொறுப்பென்று உரிமை கோரியுள்ளது. (கி)

**மணிவாக்கு**

தரையோடு தரையாக நசுக்கப்பட்டாலும் சத்தியம் மறுபடியும் எழுந்து நிற்கவேசெய்யும்.

— பிரைண்ட்

# நமது நோக்கு

## திரிசங்கு சுவர்க்கம்

தற்போது நடைபெறும் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கையைப்பற்றி இருவேறுபாடான கோரிக்கைகள் இடம்பெறுகின்றன.

இலங்கை அரசின் பெயரில் வெளிநாட்டமைச்சர், சர்வதேச பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட அங்கத்துவ நாடுகள் ஒத்துழைக்கவேண்டுமெனக் கோரியுள்ளார்; சர்வதேச பயங்கரவாதத்தின் ஒரு அம்சமே இலங்கையைத் துன்புறுத்துவதென்பது அவருடைய வாதம்; இலங்கை அரசின் பிடிவாதம்.

இலங்கையரசு இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. அங்குவாழும் சிறுபான்மை இனமான தமிழர்கள் கொல்லப்படுவதால் மனித உரிமை படுமோசமாக மீறப்படுகிறதென்றும், அதனைத் தடுத்து நிறுத்த ஐ. நா. உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பது ஐ. நா. மனிதஉரிமை உபகமிட்டியின் கோரிக்கை.

இவ்விரு முரண்பட்ட முறைப்பாடுகள் ஒரு நாட்டைப்பற்றியே என்பது பலருக்கும் வியப்பாகும், சிலர் இலங்கை ஒரு பெரும் தேசமல்லவே; எனவே இந்தப் பிணக்கு இந்தச் சிறு நாட்டில் நிலைத்திருப்பதெவ்வாறு என்றும்நினைக்கலாம்.

ஐ. நா. என்ற சர்வதேச மன்றத்துக்கு இதுபோன்ற பல பூசல்களும் 'போர்களும்' பழம்பாடம்; ஆனால் இதனைப் புறக்கணிக்கவோ அலட்சியம் செய்யவோ அதன் அமைப்பும், ஒழுங்கு முறையும் இடமளிக்காது.

பலவிதமான பரிசீலனைகள், விளக்கங்கள், வியாக்கியானங்கள் கடந்த நிலையில் 'பழங்கஞ்சியான' பக்குவத்தில் தீர்வுஒன்று கிட்டலாம் அதற்கிடையில், நினைக்க முடியாத மாற்றங்கள் ஏற்படலாம்; எதனையும் நிசமென்று கூறஇயலாது

இப்பிரச்னையின் உடனடி அபாயம் யாழ்ப்பாணத்தை பீடித்திருக்கிறது. சிறிமா அம்மையார் கூறியதுபோல ''வடக்கில் நிலைமைமோசம் போல் தெரிகிறது உண்மையைஅறியமுடியவில்லை''

இங்குவாழும் மக்களுக்கே இதன் அடிப்படைக் காரணம் தெரிந்தபோதும் இன்றைய யாழ்ப்பாணச் சம்பவங்கள் எத்திசையை நாடுகின்றன என்பது தெரிவதில்லை.

பந்தோபஸ்து அமைச்சரின் நேரடிக் கூற்றுக்களைப் புரியமுடியுமானால் உண்மை நிலை ஓரளவிற்கு விளங்கும்.

''இந்தப்போர் எவ்வகையிலும் தமிழ் மக்களுக்கெதிரானதல்ல; இதனை நான் ஒருவனே துணிவாகத் தென்பகுதியில் சொல்லி வருகிறேன்'' என்று பெருமைகொள்கிறார் லலித். சந்தையில் அடிபட்டவனுக்கு சாட்சி வேண்டுமென்பது போல வவனியாப் படுகொலையைப் பரிசீலித்திருக்கிறார் பந்தோபஸ்து அமைச்சர்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதே நோக்கம், இதற்காகவே பாதுகாப்புப் படையினரை நாம் பாவிக்க வேண்டியிருக்கிறது; பயங்கரவாதம் தலையெடுத்தால் நாடு முழுவதும் நெருப்பில் தான்'' என்பதும் அவர் 'இந்து' பத்திரிகைக்களித்த பேட்டியில் காணப்படுகிறது. இது காணி வழக்கென்பது மறைக்கப்பட்டது.

'பயங்கரவாதம்' என்ற சிங்கத்தின் தாடியை அதன் குகையிலே பிடித்தாட்டும் பெரும் பொறுப்பில் ஈடுபட்டிருக்கும் அமைச்சர் லலித், இந்தச்சிறு கால எல்லையில் எவ்வித அற்புதத்தை நிலைநாட்டுவாரென்று எதிர்பார்ப்பதுநியாயமில்லை சிங்கங்கள்(புலிகள்) இருந்தவாறிருக்க சிறு பிராணிகள்வேட்டையாடப் படுகின்றன. சிறிமாவோ அம்மையார் காலங்கடந்தாவது கண்ட உண்மையை பந்தோபஸ்து அமைச்சர் ஏற்கனவே அறிந்திருக்கிறார். நோய் வேறு; அதன் குணம் வேறு 'பயங்கரவாதம்' என்று தவறாக எண்ணிக் காலங்கடத்துவது பலனளிக்காது.

குடாநாட்டின் குட்டி யுத்தங்களின் முடிவை அறிவித்துவரும் அமைச்சர் லலித், இதுகாறும் 'எமது எதிரிகள் ஒரு அங்குலக் காணியையும் கைப்பற்ற முடியவில்லையே' என்று பெருமிதங்கொள்வது சிந்தனைக்குரியது.

'யூரெக்கா', (கண்டு விட்டேன்) இதுகாணி வழக்கு! 'இது உண்மையில் பயங்கரவாதப் போரல்ல' என்பது இதனால் வெளிப்படுகிறது. எமக்கு சட்டென வெளிப்பட்டதால் அன்று கிரேக்கத் தத்துவஞானி குளிப்பறையிலிருந்து 'கண்டுவிட்டேன்' என்று சுதறிக் கொண்டு வெளியே வந்த நிருவாணக் கோலம் நினைவுக்கு வருகிறது.

காணி வழக்கு இலகுவில் தீராது; யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் பண்டைய ஆவணங்கள் இதற்குச் சான்றாகும். 'காணியில் குடியிருக்கவிட அவன்சொந்தம் பேசுகிறான்' என்பது வழக்காளியின் வாதம்.

ஆனால் ஆவணங்களில், உறுதிகளில் கூறப்பட்டிருப்பதை விளங்கி முடிபறிய ஊழிகாலம் எடுக்கும்.

காணி வழக்கை யாழ்ப்பாணத்தவர் விடுவதில்லை; இந்த நோய் தென்பகுதிக்கும் தொற்றிவிட்டது.

'திரிசங்கு சுவர்க்கம்' என்ற பெருமூச்சு வருகிறது.

## இசை, நடனப் போட்டிகள்

(மட்டக்களப்பு)

அகில இலங்கை ரீதியில் கல்வி அமைச்சினால் தமிழ் மொழி பாடசாலைகளிடையே இசை, நடனம், நாடகப் போட்டிகள் இவ்வருட இறுதியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இசை, நடன நாடகப் போட்டிகள் ஆரம்ப, கனிஷ்ட சிரேஷ்ட பிரிவு என நடைபெறவுள்ளது.

### வல்வெட்டித்துறையில்

# இளைஞர்களை இப்படித்தான் வளைத்துப் பிடித்தார்கள்

## 'இந்தியாருடே' தரும் விபரம்

வல்வெட்டித்துறை பகுதியில் கடந்த ஆகஸ்டில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து 'இந்தியா ருடே' சஞ்சிகையின் நிருபர் எஸ். எச். வெங்கட்ரமணி ஸ்தலத்திற்குச் சென்று நேரில் ஆராய்ந்து எழுதியுள்ள கட்டுரை அதன் செப்டம்பர் 15ம் திகதி இதழில் வெளிவந்துள்ளது. அதனை இங்கு தருகின்றோம். —'பெ'

யாழ்ப்பாண மாகாணத்தில் வல்வெட்டித்துறை என்ற கடற்கரை நகரில் அன்று காலைப் பொழுது அழகாகவும் அமைதியாகவும் இருந்தது இருந்தாலும் ஆகஸ்ட் 4ம், 5ம் திகதிகளில் இலங்கை இராணுவம், கடற்படைக்கும் தீவிரவாத இளைஞர்களுக்குமிடையில் பயங்கர மோதல்கள்இடம் பெற்றிருந்தமையால், சனங்கள் தமது அன்றாடக் கடமைகளுக்காக கூடியவரை அமைதியாகப் போய்வந்து கொண்டிருந்த போதிலும் ஒருவித பதட்டம் நிலவத்தான் செய்தது. இது ஆகஸ்ட் 21ம் திகதி ஏதாகிலும் அசம்பாவிதம் நடைபெற்றதற்கான சாயலையும் காணோம்.

இந்த நிலைமையில், எங்கிருந்தோ வல்வெட்டிதுறையிலிருந்து பருத்தித்துறை போகும் வழியில் நெல்லியடி வீதியில் திடீரென இராணுவ வாகனங்கள் தோன்றின பூரணமாக ஆயுதம் தரித்த 25க்குமதிகமான சிப்பாய்கள் வெளியில் குதித்து வீதியிலும் மற்றொரு பக்கம் சில வீடுகளின் முன்னாலும் உஷார் கொடுத்து நின்றார்கள். வீதியில் வாகனங்கள் ஸ்தம்பித்தன இதை கண்ட சனங்கள் வீடுகளைச் சாத்திக் கொண்டார்கள் தைரியமுள்ள சிலர் மட்டும் அரைவாசி திறந்த யன்னல் வழியாக எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தனர். இதையடுத்து இளைஞர்களை மடக்கிப் பிடிப்பது ஆரம்பமாயிற்று.

பொழுது சாய்வதற்கு முன் இந்த நடவடிக்கை மிகவும் இரக்கமற்ற முறையில் நடந்தது. அந்த் நகரில் சுமார் 15 ஆயிரம் மக்களில் 300 இளைஞர்கள் ஏற்கனவே இரண்டு வாரங்களுக்கு முன் கொண்டுபோகப்பட்ட சுமார் 560 பேருடன் சேர்த்துக் கொள்ளும் விதமாகப் பொறுக்கி எடுக்கப்பட்டனர். முன்பு போலவே இவர்களும் எங்கோ ஓர் அறிவிக்கப்படாத இடத்துக்குக் கொண்டு போகப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் இளைஞர்களை மடக்கிப் பிடித்த நடவடிக்கைக்குப் பொறுப்பாய் இருந்த கேணல் பரமசேக்கர இது பற்றி பின்வருமாறு கூறினார்; இந்த இளைஞர்களைச் சந்தேகத்தின் மீதுதான் தடுத்துவைத்திருக்கிறோம். தமிழ் புலிகள் யார் என்பதைப் பற்றி இவர்களை விசாரிப்போம் இல்லையென்றால் யாழ்ப்பாணததில் எவருமே அவர்களுக்கு எதிராக ஏதும் சொல்லத் துணியமாட்டார்கள் விசாரணையின்பின் இவர்களை நாம் விடுதலைசெய்வோம்''

இந்த உறுதிமொழியை யாழ்ப்பாணத்தில் மக்கள் அவ்வளவு உறுதிப்பாட்டோடு ஏற்றுக்கொள்வதில்லை கைது செய்யப்பட்ட 800 அல்லது 900 பேரில் ஆகஸ்ட் 25ம் திகதிவரை 50 பேர்வரைதான் விடுவிக்கப்பட்டிருந்தனர், ஒரு நாளில் பத்துபேருக்குமேல் விடுவிக்கப்படுவதில்லை.

''வல்வெட்டித்துறை குறித்து நாங்கள் மிகவும் கடுமையாக நடந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அதுதான் தமிழ் ஈழப்புலிகளின் இருப்பிடம். மேலும் அதுவே கடத்தல் காரர்களின் உறைவிடமுமாகும்'' என்றார் பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி.

வடக்கில் சாதாரணமக்கள் பீதியில் உழல்கிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை. யாழ்ப்பாண குடாநாட்டில் மாமூல் வாழ்க்கைமுற்றாகஸ்தம்பித்துக் கிடக்கிறது: ஒருசில கடைகள் தான் சிலசமயம் கதவுகளைத் திறக்கின்றன, அதுவும் பகல் வேளையில சிலமணிநேரம்மட்டும். பெழுதுசாய்ந்ததும் வீதிகள் வெறிச்சோடிவிடுகின்றது. கட்டாக்காலி நாய்களைத்தான் வீதிகளில்பார்க்கலாம் வங்கிகள் பயங்கரவாதிகளால் கொள்ளையடிக்கப்படும் என்ற பயத்தில் திறக்கப்படுவதில்லை. சம்பளங்கள், பென்சன்கள் முதலியவை கொடுபடவில்லை. மரக்கறிகளுக்கும் உணவுச்சாமான்களுக்கும் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தமிழர்கள் பூரணமாக தனிமைப்படுத்தப்பட்டு விட்டார்கள்,

தினமும் அதிகரித்துவரும் கஷ்டங்களுக்குள்ளாகும் வல்வெட்டித்துறை மீனவர் சுந்தரலிங்கம் பின்வருமாறு கூறினார், கடந்த ஆறுமாதங்களாக உணவு பெறுவதற்காக நாங்கள் எமது சாமான்களை அடகுவைத்து வந்துள்ளோம் இப்பொழுது உணவும் கூட பெரிதாகப் படவில்லை. இங்கு நாம் உயிருடன்வாழவிடப் படுவோமா என்பதே இப்போது எமக்குள்ள கவலை.''

[5-ம் பக்கம் பார்க்க]

## தனியார் மருத்துவக்கல்லூரி

மக்கள் கருத்துப் பகுதியில் 25/8/84 வெளிவந்த தனியார் மருத்துவக் கல்லூரியைப் பற்றிய கருத்துத் தொடர்பாக பின்வரும் விஷயங்களை நாம் உணர்த்த வேண்டியுள்ளது.

ஒரு தனியார் மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பது மிக மிகக் கஷ்டமான விஷயம் என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தும் நாம் இதை தாபிப்பது ஒரு சமூக நல் நோக்கம்.

இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு தகுதியிருந்து சேரமுடியாத தவிப்பினால் அவர்களும், பெற்றோரும், கல்விமான்களும் எம்மைக் கேட்டுக்கொண்டதன்பேரில் இதை நிறுவ முன்வந்தோம். இத்திட்டத்துக்கு பூரண ஆதரவு கொடுப்பது அவரவர் கடமை. இக்கல்லூரியை நிறுவுவதற்காக இலங்கை ஜனாதிபதிக்கும், உயர் கல்வி நிரந்தர காரியதரிசிக்

# மக்கள் கருத்து

கும் எமது திட்ட ஒழுங்குகளைப்பற்றி அறிவித்ததன் பேரில் எங்களுக்கு இவ்விஷயத்தை கவனமெடுப்பதற்காக அந்தந்த திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளதாக எமக்கு பதில் அனுப்பியுள்ளனர்.

இலண்டன் மருத்துவ நிறுவனங்களுக்கும், பிரித்தானிய மருத்துவ சங்கத்துக்கும், அமெரிக்க மருத்துவ நிறுவனத்துக்கும் எமது திட்டக் கருத்துக்களை அறிவித்து அவர்களின் உதவியை நாடியுள்ளோம்.

இலங்கைப் பல்கலைக்கழகம் மருத்துவக் கல்லூரி ஆரம்பித்த காலத்தில் எவ்வித இணைப்புக் கல்லூரியாக இயங்கியது என்பதையும் இதற்கான பூரண அங்கீகாரம் சில ஆண்டுகளுக்குப் பின் தான் கிடைத்தது என்பது இலங்கை உயர்கல்வி, பல்கலைக்கல்வி வரலாற்றை கற்றோர்களுக்கு நன்கு புலனாகும்.

காரியதரிசி,
உயர்கலைக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு;

தனியார் மருத்துவக் கல்லூரி நிறுவது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இயங்கி வருவதும் பொறுப்புள்ளதுமான யாழ். மருத்துவ சங்கத்தினர் சில ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள். அதன் பொருத்தம் கருதி இங்கு தருகின்றோம்.

(ஆர்)

யாழ்ப்பாணத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி நிறுவுவதற்கான தேவைகளை நாங்களும் உணருகின்றோம் ஆனால் அந்த மருத்துவக்கல்லூரிக்கு தேர்ந்தெடுக்கும் மாணவர்களை ஏமாற்றமும் விரக்தியும் அடையாமல் செய்வதே எமது விருப்பமாகும்.

பல கோடி ரூபா செலவையும், மாணவர்களின் வருங்காலத்தையும் உள்ளடக்கிய இப்படியான பெரு முயற்சி பொறுப்பு வாய்ந்த முறையில் செயல்படவேண்டும். பொதுமக்களுக்கு குறிப்பாக பெற்றோர்—மாணவர் மத்தியில் தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடாது.

மருத்துவக்கல்லூரியை அமைப்பதற்கு அரசிடமிருந்தும் (உயர் கல்வி அமைச்சு உட்பட) பட்டம் வழங்கும் ஸ்தாபனங்களிடமிருந்தும் (பல்கலைக்கழகங்கள்) மருத்துவத் தொழில் புரிய அனுமதியளிக்கும் (மெடிக்கல் கவுன்சில்) ஸ்தாபனங்களிடமிருந்தும் திட்டவட்டமாக எழுத்து மூலம் அனுமதி பெறாமல் மாணவர்களைச் சேர்ப்பது முறையற்றது.

மேற்குறிப்பிட்ட அனுமதிகளைப் பெற்ற பின்பும் குறைந்தது மருத்துவப் படிப்பிற்குப் பின்பும்கூட முதலாவது தரத்துக்கான பயிற்சியை (இரண்டாம் எம். பி. பி. எஸ். பரீட்சை) அளிக்கக்கூடிய தரமான கட்டிடம், உபகரணங்கள், ஆய்வுகூட வசதிகள் சம்பந்தப்பட்ட அடிப்படை மருத்துவக் கல்வியில் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்கள் ஆகியவற்றுக்கான ஒழுங்குகள் பூர்த்தியான பின்பே மாணவர்களை அனுமதிக்கவேண்டும்.''

## புங்கங்குளம் ரயில் நிலயத்தில்

# ‘ட்ரக்’ நின்றதும் மக்கள் பட்டபாடு...

(கல்வியங்காடு)

யாழ். புங்கங்குளம் ரயில் நிலயப்பகுதி மக்கள் மீண்டும் அச்சத்துக்குள்ளான சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் நடைபெற்றது.

நேற்றுப்பகல் கண்டி வீதியால் இராணுவ வாகனங்கள் பல ஊர்வலமாக வந்துகொண்டிருந்தவேளையில் ஆகாயத்தில் ஹெலிகொப்டர் ஒன்று வட்டம் சுற்றியபடி ஓடிக்கொண்டிருந்தது. கண்டி வீதியில்வந்து கொண்டிருந்த இராணுவ வாகனங்கள் திடீரென ரயில்வே நிலயத்தில் திருப்பப்பட்டு நிறுத்தப்பட்டன.

இதனுல் இப்பகுதி மக்கள் கிலி கொண்டு வீடுகளில் பதுங்கினர். இப்பகுதி சனசமூகநிலயத்தில் இயங்கும் தனியார் டியூட்டறியில் அச்சமயம் கல்வி பயின்றுகொண்டிருந்தநூற்றுக் கணக்கான மாணவ மாணவிகள் அச்சமடைந்து செய்வதறியாது திகைத்தனர். ஆயினும் நிறுத்தப்பட்ட இராணுவத்தினரின் வாகனங்களில் ஒன்றுக்கு டயர் ஒன்றிலிருந்து காற்றுப் போய்விட்டதே அவை நிறுத்தப்பட்டதற்கான காரணம் என்பது பின்பு தெரியவந்தது.

‘ரயரை’ மாற்றிய பின்பு இராணுவ வாகனங்கள் நகரத் தொடங்கின.

அவை நகர்ந்தபின்பே மக்கள் பயம் தெளிந்தனர் வீடுகளிற் பதுங்கியிருந்த மக்கள் வீடுகளினின்றும் வீதிக்கு வரத் தொடங்கினர்!

# அடம்பன் கொலை வழக்கில் எதிரி விடுதலை!

[வவனியா]

வவனியா மேல் நீதிமன்றச் சுற்றுஅமர்வில் யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி திரு.ஜே.ஜி. ஆசீர்வாதம் அவர்களால் தமிழ்பேசும் யூரர்கள் சமூகத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட மன்னுர் அடம்பன் காத்தான் குளம் கொலைவழக்கில் ஏழு நாட்கள் நடைபெற்ற விளக்கத்தின் முடிவில் எதிரியான சந்தன் கைத்தான் ஞானராஜா[34] 5:2 அடிப்படையில் சுற்றவாளியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

விவசாயியான இந்தஎதிரிக்கு எதிராக அன்று காத்தான் குளம் என்றஇடத்தில்வைத்து அவரது மூத்த சகோதரரான சந்தன் கைத்தான் குலேந்திரம் என்ற கூட்டுறவுக் சங்கமுகாமையாளரைச்[35வயது]சுட்டுக் கொலைசெய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

அரசதரப்பில் பிரதானசாட்சியாக அழைக்கப்பட்டிருந்த இறந்த குலேந்திரன் மனைவியான சபீனு பின்வருமாறு சாட்சியம் அளித்தார்.

‘‘எதிரி என்கணவரின் தம்பி நாங்கள் ஒரேகாணியில் வெவ்வேறுவீடுகளில் வசிக்கிறும் எங்களுக்கிடையே காணித் தகராறு இருந்தது இதுசம்பந்தமாக எனது கணவர் செய்த முறைப்பாட்டை அடுத்து ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் விசாரணைக்குச் சம்பவதினத்தன்று எங்கள் வீட்டுக்குவந்திருந்தார் அவரை விட்டுவிட்டு வீடுதிரும்பிய எனது கணவர் எங்கள் வீட்டுவாசலில் உள்ள கேணியில் குளித்தார் அப்போது ஒரு வேட்டுச்சத்தம் கேட்டது ஓடிவந்து பார்த்தபோது எனதுகணவர் கேணியில் விழுந்துகிடந்தார் இந்த எதிரிபத்தடி தூரத்தில் துவக்குடன் ஓடக்கண்டேன் சவரிமுத்து,ஜோச் ஆசியோர் ஓடிவந்து கணவரை தூக்கஉதவினுர்கள் தூக்கும்போது அவர் இறந்துவிட்டார் எதிரியின் சார்பில் ஏற்பட்டிருந்த சட்டத்தரணி கனகமனேகரன்சபீனுவின் பொலிஸ் வாக்குமூலம் மரணவிசாரணைச் சாட்சியம் நீதவான்நீதிமன்றச் சுருக்க விசாரணை ஆகியவற்றைப் பயன்படுத்தி அவரை ஒன்றரை நாட்கள் குறுக்கு விசாரணை செய்து 15 முரண்பாடுகளைப் பெற்றுக் கொண்டார்.

மற்றொரு சாட்சியான இரசாயனப் பகுப்பாளரான நிபுணர் மென்டிஸ் தனது சாட்சியத்தில் எதிரியின் துப்பாக்கியில் இருந்துதான் குறித்த பச்சைநிற வெற்றுத்தோட்டாவும், சிவப்பு நிற அந்து தோட்டாக்களில் மூன்றும் வெடிவைக்கப்பட்டுள்ளது. என்று குறிப்பிட்டார்

திரு கனக மனோகரனல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது வைத்திய அறிக்கையில் சன்னங்களின் பரம்பல் 18 செ. மி X 14 செ. மி ஆக இருப்பதால் இறந்தவர் 40 அடிதூரத்திலிருந்து சுடப்பட்டிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார் வவனியா மாவட்ட வைத்தியஅதிகாரி எஸ். நிரஞ்சன் அவர்கள் இறந்தவருக்கு சன்னங்களால் ஏற்படுத்தப்பட்ட 11 உட்புறக்காயங்கள் உண்டு என்றும் அவை இருதயம்,ஈரல்,நுரையீரல் என்பனவற்றைத் துளைத்திருப்பதால் இறப்பு உடனடியாகச் சம்பவித்திருக்கவேண்டும் என்று தெரிவித்தார். குறுக்கு விசாரணையில் உட்புறகாயங்களின் விளிம்புகளில் கருமைபடர்ந்திருப்பதால்அவர் 5,6 அடிக்குள் இருந்து சுட்டிருக்க இடமுண்டுஎன்றும் தெரிவித்தார்.

அடுத்து அவரைக் குறுக்கு விசாரணை செய்தஅரசசட்டத்தரணி திரு.சுந்தரம் ஸ்ரீஸ்கந்தராஜா அவரில் ஒரு முரன்பாட்டைப் பெற்றுக்கொண்டனர்.அடுத்து எதிரி கூண்டில் இருந்தபடியே ஒருவாக்குமூலம் அளித்தார் அதன் பின்னர் அரசசட்டத்தரணி ஒன்றரை மணிநேரமும் எதிரியின் சட்டத்தரணி ஆறுமணி நேரமும் தொகுப்புரை நிகழ்த்தினுர்கள் இறுதியாக நீதிபதி இரண்டுமணித்தியாலத்திற்கு உரை நிகழ்த்தினுர்.

ஏழுநாட்கள் நடைபெற்ற விசாரணையின் முடிவில் யூரர்கள் 5:2 ஆகப்பிரிந்து அளித்த தீர்ப்பால் எதிரியை நிரபராதியாகக் கண்டதை அடுத்து எதிரிவிடுதலை செய்யப்பட்டார்.

## யாருடையது

துன்னலை தெற்கு செல்வி பாக்கியவல்லி வன்னிய சிங்கத்தின் அடையாள அட்டையை திரு.க.சிவலிங்கமும், கோப்பாய் வடக்கு திரு.ஐயாத்துரை சிவலோகநாதனின் அடையாள அட்டையை திரு. இ.சுவாமிநாதனும். வட்டுக் கோட்டை மேற்கு திரு.வடிவேலு பூலோகராசாவின், அடையாள அட்டையையும் ஒரு தொகைப்பணத்தையும் திரு வி முகமட் ருஜீப்பும், திரு M H T.முகதீன் அப்துல் காதரின்சாரதி லைசென்சை திரு.எம்.சதானந்தராசாவும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

# இளைஞர்களை...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவிலுள்ள கைதடியில் ராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில அண்மையில் தற்செயலாக நடைபெற்ற மோதலின்போது இலங்கை ராணுவ நடவடிக்கைகளின் விவகாரத் தன்மையும் அதைத் தொடர்ந்து நடைபெறும் படுகொலைகளும் பற்றிய விபரம் தெளிவாக வெளியிடப்பட்டது. ஜீப்புகள், வான்கள், டிரக்குகள் ஆகிய 9 வாகனங்களைக் கொண்ட ராணுவ அணியொன்று ஆகஸ்ட் 13-ம் திகதி மேற்படி நகரைத் தாண்டிச் செல்கையில் ஆயுதம் தரித்த தீவிரவாத இளைஞர்கள் அடங்கியஒரு வானை எதிர்கொண்டபோது அந்தச் சம்பவம் நடைபெற்றது. அந்த வானில் இருப்பவர்கள் யார் என்று அறியாமலே ஆறு வாகனங்கள் கடந்து விட்டன. ஏழாவது வாகனப் வானில் மோதியதால் சாரதி ஸ்தலத்திலேயே மாண்டார். ஆயுதங்களுடனிருந்த தீவிரவாதிகள் ஓடி விட்டார்கள், ராணுவத்தினர் சுட்டனர், எட்டுப்பேர் மாண்டனர், ஓடித் தப்பமுயன்ற புலிகள்தான் கொல்லப்பட்டனர், என்று அத்துலத்முதலி எமக்குக் கூறினுர். ஆனுல் ஸ்தலத்தில் ஆராய்ந்தபோது அவர்கள் அங்கு நின்றிருந்த அப்பாவித் தமிழர்கள் என்பது தெரியவந்தது. அவர்கள் அனைவரும் றேட்டின் அடுத்த பக்கம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வளவுக்குள் அல்லது வெளியில் நின்றவர்கள் என்று பார்த்தவர்கள் கூறினுர்கள். இவர்களில் மூவர் அச்சங்க ஊழியர்கள் ஏனையவர்கள் சாமான்கள் வாங்க வந்தவர்கள். ‘‘சங்கத்திலிருந்த உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் ராணுவம் கொள்ளையடித்துச் சென்றது. துன்பத்துக்குமேல் துன்பம்தருவதாக இருந்தது’ என்ருர் சங்கத்தின் தலைவர் கணேசன் என்பவர்.

பொது மக்களைக் கொன்றுவிட்டு அவர்களை பயங்கரவாதிகள் என்று கூறுவது ராணுவத்துக்கு வழக்கமாகிவிட்டது, என்று யாழ்ப்பாணம் ஆயர் அதி வந். தியோகுப்பிள்ளை கூறினுர். ‘தமிழர்களாகிய நாம் உதவியற்ற ஒரு சிறுபான்மை - அடிமைகளாகிவிட்டோம்’ என்ருர் அவர்.

‘சிங்கள ராணுவம் இடைவிடாது அட்டூழியத்தில் இறங்குவதும் ஏழை அப்பாவி மக்களை கொல்வதுமாக இருக்கிறது’ என்று த. விடுதலைக் கூட்டணி தலைவர் எம். சிவசிதம்பரம்.

அண்மைக்கால கலவரங்களில் வடமாகாணத்தில் சுமார் 70 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டதை அவர்கள் சுட்டிக் காட்டினர். வல்வெட்டித்துறை சுமார் 100 கடைகளும், மன்னுரில் சுமார் 106 கடைகளும் நாசமாக்கப்பட்டன.

‘‘இராணுவத்தினர் இளைஞர்களை விசாரிப்பதற்காகத் தடுத்துவைப்பதைச் சிலசமயம் நாம் புரிந்துகொள்ளமுடிகிறது. ஆனுல் அப்படித்தடுத்து வைக்கப்படுகிறவர்கள் மிகக் கொடுமையானமுறையில் நடத்தப்படுகிருர்கள்’’ என்றுகூறுகிருர் முன்னுள் கோப்பாய் எம். பி. திரு. ஏ. எம். ஆலாலசுந்தரம்.

கைது செய்யப்படுகிறவர்கள் விலங்கு பூட்டப்பட்டுத் தாக்கப்படுவதாகவும் சரியாக உணவு வழங்காமல் கொடுமைப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்கள். ஆகஸ்ட் 4 ம் திகதி தடுப்புமுகாமுக்குக் கொண்டு போகப்பட்ட மீனவரான அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினுர்;-

நாங்கள் அனைவரும் வரிசையாகச் சங்கிலியினுல் வான்களிலும், டிரக்குகளிலும் ஏற்றிக்கட்டப்பட்டிருந்தோம் சிப்பாய்கள் தமது கரடுமுரடான சப்பாத்துக்களால் ஏறிமிதித்தார்கள். நாம் தண்ணீர் கேட்டபோது சேற்றுத் தண்ணீரை வாளிகளில் கொண்டு வந்து எங்கள் தலைகள்மீது ஊற்றினுர்கள்.

21 வயது மாணவனுன அருந்தவராஜா பின்வருமாறு கூறினுர்;: ‘‘நான் எனது அடையாள அட்டையுடன் மிகவும் கடமையுணர்வுடன், விசாரணையின் பின் விட்டுவிடுவார்கள் என்று சென்றேன்’’

14 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட அனைவரும் வரவேண்டும் இல்லையெனிற் சுடப்படுவார்கள் என்று இராணுவத்தினர் அறிவித்தபோது இவர் தம்மைத்தாமே இராணுவத்தினரிடம் ஒப்படைத்துக் கொண்டவர்.

‘‘என்னை ஒரு டிரக்குக்குள் ஏற்றிப் பலாலி முகாமுக்குக் கொண்டு போனுர்கள். பின்னர் அநுராதபுரம் கொழும்பு முகாம்களுக்கும் கடைசியில் காலி பூஸா முகாமுக்கும் கொண்டு போனுர்கள். சிங்களப் பகுதிகளுக்கூடாகச் சென்றபோதெல்லாம் எங்களைத் தமிழ் புலிகள் என்று இராணுவத்தினர் அறிவித்தார்கள். எம்மை முகம் குப்புறப் படுக்கச் சொல்லி ஏறிமிதிப்பார்கள்’’ என்று அவ்விளைஞர் கூறினுர்.

[மிகுதி நாளை]

# இலங்கை மீது இந்தியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

,‘இந்திய உளவுப் பிரிவு (றோ), ஆராய்ச்சிப் பகுதிப் பிரிவு, மற்றும் புலனுய்வுத் துறைப்பிரிவுகளில் கடமையாற்றுபவர்கள் இணைந்து செயலாற்றும் பிரிவே மூன்ருவது ஒற்றர் படைப்பிரிவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘‘மூன்ருவது ஒற்றர் அமைப்பு எப்படிச் செயல்படுகிறது என்றும் இந்தியப் புலனுய்வுத்துறை அதிகாரிகள் எவ்வாறு இலங்கையில் வடபகுதி தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிருர்கள் என்பது பற்றியும் விபரங்களை ‘சூரியா’ சஞ்சிகை வெளியிட்டுள்ளது.

‘‘இந்திராவின் பிரதம ஆலோசகர்ஆர்.என்.கார்க்கோ மேற்பார்வையில் மூன்ருவது ஒற்றர்படை இயங்குகிறது. இந்திராவின் செயலக இயக்குநர் சங்கரநாயரின் ஆலோசனையில் உருவாகியதே இந்த மூன்ருவது அமைப்பு.

‘‘இந்திராவின் தேர்தல் பிரசாரத்துக்கு உதவவே இந்த மூன்ருவது ஒற்றர் அமைப்பு உருவானது. அமிர்தசரஸில் உள்ள புனித பொற்கோவில் மீது தாக்குதல் நடத்தியதும் இந்த மூன்ருவது ஒற்றர் படையே.

‘‘கொழும்பில், இலங்கையின் இந்தியத் தூதரகத்தில் ராஜ தந்திரியாக இருந்த பாரூக் என்பவர் தமிழ் தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டு, யாழ்ப்பாணத்துக்கும், சென்னைக்குமிடையில் முதலாவது தொடர்பை ஏற்படுத்திக்கொடுத்தார். இதற்கு பின்னர், பாரூக்குக்குப்பதிலாக றூபேந்திரா இந்தியத் தூதரகத்தில் பொறுப்பேற்ருர் இவர் அகாலித்தள் போராட்டத்தில் ஈடுபட்டவர்.

‘‘தமிழ் தீவிரவாதிகளின் பயிற்சி முகாம் இவர்களின் முயற்சியால் இந்தியாவின் வடபகுதியில் ‘டெஹிர’வில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்டது.

ஏ.அர்ச்சுணன்என்பவருக்குப் இதில் பங்குண்டு. 2,000பேர் அங்கு முதல் தடவையாகப் பயிற்சி பெற்றனர்.

‘‘1983-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் புதுடில்லியிலிருந்து ராஜு பஸ் சேவை மூலமாக 300 பேர் வீதமாக சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கிருந்து இவர்கள் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர்.

‘‘இஸ்ரேலின் ‘மொசாட்’ பிரிட்டனின் கூலிப்படை ஆகியவற்றின் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய கட்டம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. 1984-ஆம் ஆண்டு இறுதியில் இலங்கையின் நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது இந்தியாவுக்குச் சாத்தியமாகும்.

‘‘சிங்கள ராணுவத்தினுல் தமிழ் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவேண்டிய ரட்சகர்களாக இந்தியா இப்போது உள்ளது.

‘‘வங்காள தேசத்துக் கதாநாயகி, புதுப்பாத்திரம் ஏற்று தமிழ்ஈழத்தேவியாக மாறுவது இந்தியாவுக்குப் பெரும் சிறப்பாக அமையும்என்று இந்தியா குறிப்பிட்டுள்ளது. இதனை எவராலும் இனித் தடுக்க முடியாது’’ என்று ‘சூரியா’ சஞ்சிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## யாழ். தீயணைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய நிலைமை காரணமாக மேலும் நிதியுதவி தேவைப்படுவதாகவும் தற்போதுள்ள சூழ்நிலையில் நிதியுதவியை நேரில் பெற முடியாதிருப்பதால் அதனை அனுப்பிவைக்குமாறும் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தீயணைக்கும் படைக் கருவி நவம்பர் மாத இறுதியில் யாழ்ப்பாணம் வந்துசேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. (க)

## முல்லைத்தீவு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வீதிகளிலும், பெற்ருேர் திரண்டிருந்தனர்.

கச்சேரி உத்தியோகத்தர்கள், தடுப்பு முகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையைத் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியாலயம் மற்றும் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில அப்பகுதியில் கைது செய்யப்பட்ட சுமார் 150 இளைஞர்கள் விசாரணை செய்யப்படவிருக்கின்ருர்கள் எனக் கூறப்படுகிறது.

இவர்களில் ஒருபகுதியினர் நேற்று விடுதலை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

## பிந்திய செய்தி

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள், விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டபின், முல்லைத்தீவு கச்சேரிக்கு நேற்றுக்காலை வந்த தாய்மார்கள், நண்பகல் திரும்பிச் சென்றனர்

கச்சேரி உத்தியோகத்தர்கள், முகாம் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபின்னர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தனர்.

இன்று முதல் இளைஞர்கள், விசாரணையின் பின் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தாய் மாரிடம், தெரிவிக்கப்பட்டது.

நேற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்லூரிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை.

(க)

# இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—12(28-09-1984]
வாரம்—வெள்ளி
திதி—சதுர்த்தி பின் இரவு 1 மணிவரை
நக்ஷத்திரம்—சுவாதி காலை 8-10 மேல் விசாகம்

மேடம்:- குடும்பத்தில மகிழ்ச்சி கரமான சூழ்நிலை தென்படும், காதல்வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான தினம், களஸ்திரவழியாலும் நன்மைகளுக்கு இடமுண்டு

இடபம்;-தொழில்துறையில் எதிர்பாரத நஷ்டத்திற்கு இடமுண்டு, புதிய முதலீடுகளைப் பின் போடவும், உடல் நலத்தைப் பேணி நடக்கவும்.

மிதுனம்:- நீண்ட நாள்பிரச்னையில் சமரச முடிவு காணப்படும் தனவரவுக்கும் இடமுண்டு பிதாவழி ஆதரவும் கிடைக்கும்.

கடகம்:-வியாபாரத் துறையில் துரிதமுன்னேற்றம், புதுத் துறைகளில் மனம் நாடுதல் பயன தரும், பிரயாணம் நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத்தின் துணையுமுண்டு.

சிங்கம்;- பொருளீட்டுவதில் புதிய வழிகளைக்கையாள்வீர்கள், எதையும் சிறப்பாகச்செய்வீர்கள் உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு.

கன்னி:- குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ள நேரும், திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும், பொறுமையைப் பேணி நடக்கவும்.

துலாம்:- நிச்சயமற்ற நிலையால் வேதனைப்படுவீர், எதிர்பார்த்த பொருள்வரவு இன்றி தடைப்படலாம், உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும், ஊண் விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

விருச்சிகம்:- பணமுடை தீரும், பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை ஏற்தென்படும்.

தனுசு:- வாழ்க்கையில் புதிரானநிலை தென்படும், எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும், சகோதரவழியால் கவலைகள் தோன்றக்கூடும், மனத்திடம் வேண்டும்.

மகரம்:- இலாபகரமான தொழிலில் ஈடுபடுவீர்கள், வாகனச்சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் உண்டு, தாய்வழியாலும் தனவரவிற்கும் இடமுணடு.

கும்பம்:- இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம்கூடுவர், புத்திர சுகத்துடன் தொழில் துறையில் வெற்றியும் கிடைக்கும்,

மீனம்: அவசரக் கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும், மனதில் விரக்தி தோன்றும். வீணை சிந்தனைகளினால் சோர்வு நிலை தென்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கருத்தரங்கு

[சுழிபுரம்]

சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினரால் சுகாதாரக் கருத்தரங்கு பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் வித்தியாசாலையில் நடத்தப்பட்டது. வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். செல்லத்துரை தலைமையில் இக் ககருத்தரங்கு நடைபெற்றது.

## தம்பிலுவில் பனம்பொருள் உற்பத்தி நிலையம்

(வண்ணர்பண்ணை)

பொத்துவில் தொகுதியைச் சேர்ந்த தம்பிலுவில் கிராமத்தில் பனம் பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கபபட்டுள்ளது.

பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினரும். மட்டக்களப்பு மாவட்ட அமைச்சருமான திருமதி ரங்நாயகி பத்மநாதனின் வேண்டுதலுக்கமைய இலங்கைப் பனை அபிவிருத்திச் சபை இப்பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துள்ளது.

# நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

## வரவு - செலவுக் கணக்குக் கூற்று

## 1-1-1983 - 31-12-1983

| | | |
|---|---|---|
| 1-1-83ல் ரொக்கக் கையிருப்பு | | 9,947-40 |
| வங்கியிலுள்ள காசு | | |
| இலங்கை வர்த்தக வங்கி சேமிப்புக் க/கு | | |
| இல, 1370 | 27,988-13 | |
| இல. 2844 | 47-16 | |
| இல. 2080 | 172-30 | 28,207-59 |
| இலங்கை வர்த்தக வங்கி நிலையான வைப்புக் க/கு | | |
| இல. 81 J 568 | 7,12,000-00 | |
| இல. 81 J 2053 | 11,568-44 | |
| இல. 80 J 1842 | 8,802-07 | 732,370-51 |
| | | 770,525-50 |
| கூட்டுக: வரவுகள் | | |
| (அ) கோவில் வரவுகள்: | | |
| பூஜை | | 89,026-50 |
| அர்ச்சனை | | 102,758-00 |
| மாதாந்த விசேட பூஜை | | 6,695-00 |
| காணிக்கை | | 35,180-20 |
| அபிஷேகம் | | 44,825-50 |
| கல்யாண மண்டபம் | | 500-00 |
| நாணுவிதம் | | 71,015-30 |
| திருப்பணி | | 100,809-00 |
| (ஆ) பிற வரவுகள்: | | |
| வாக்காளர் சந்தா | | 3,570-00 |
| உண்டியல் | | 52,417-41 |
| "நயினை நாகபூஷணி" படகுச் சேவை | | 11,231-00 |
| திருவாபரண விற்பனை | | 459,175-00 |
| திருமணங்கள் | | 2,000-00 |
| பயணப் படகு விற்பனை | | 30,500-00 |
| நாணுவிதம் | | 4,651-00 |
| (இ) வங்கியிலுள்ள வைப்புப்பணத்தின்பேரில் வட்டி வரவு | | 102,711-81 |
| | | 1,887,591-22 |

| | |
|---|---|
| கொடுப்பனவுகள் ; | |
| (அ) கோவிற் செலவுகள் : | |
| பூஜை | 80,038-85 |
| அபிஷேகம் | 19,964-15 |
| அச்சுச் செலவு | 19,187-80 |
| தபாற் கட்டணம் | 3,660-99 |
| நாணுவிதம் | 37,219-34 |
| பிரயாணம் | 9,601-15 |
| சம்பளங்களும் வேதனங்களும் | 1,61,253-27 |
| திருமணங்கள் | 2,668-48 |
| மின்சாரம் | 2,500-00 |
| (ஆ) பிற செலவுகள் : | |
| சட்ட சம்பந்தமான செலவு | 7,952-45 |
| காணிச் செலவு | 12,053-00 |
| புனருத்தாரணம் | 89,061-25 |
| தளபாடம் | 47,318-55 |
| பயணப் படகுச் செலவு | 18,955-25 |
| (இ) கட்டிடங்கள் அமைப்புச் செலவுகள் : | |
| கல்யாண மண்டபம் | 81,140-40 |
| உருத்திர மண்டபம் | 1,90,395-53 |
| தென்வாசல் ராஜகோபுரம் | 17,278-85 |
| நால்வர் கோவில் | 7,857-05 |
| பொதுவான கட்டிடச் செலவு | 1,69,090-47 |
| தீந்தைப் பூச்சு | 39,719-60 |
| ஆசாரி | 19,770-00 |
| (ஈ) மண்டலாபிஷேகம் : | 67,725-10 |
| (உ) குப்பாபிஷேகம் : | 2,30,589-37 |
| (ஊ) கும்பாபிஷேக மலர் : | 46,879-90 |
| (எ) வங்கிச் செலவுகள் : | 2,273-95 |
| (ஏ) முற்பணக் கொடுப்பனவு : | 4,000-00 |
| (ஐ) தொங்கற் கணக்கு : | 48-20 |
| 31-12-83 ல் வங்கியிலுள்ள காசு ; இலங்கை வர்த்தக வங்கி | |
| நிலையான வைப்புக் க/கு. | 4,47,000-00 |
| — ஷை — , நடைமுறைக் க/கு. | 37,822-55 |
| புங்குடுதீவு மக்கள் வங்கி' — ஷை — | 4,282-63 |
| 31-12-1983ல் கையிருப்பு ரொக்கம் | 10,283-09 |
| | 1,887,591-22 |

**முக்கிய குறிப்பு:** 1–4–1975 தொடக்கம் 31–12–83 வரைக்கும் உள்ள காலப்பகுதி தொடர்பான கோவில் மற்றும் திருப்பணிச்சபைக் கணக்குகளும், (பெறுநரின் நிர்வாகக் காலத்துக்குரிய கணக்கு களைத் தவிர), தற்போது பட்டயம் பெற்ற கணக்காய்வாளர்களாலும், வழிபடுநர் மகாசபை நியமித்த கணக்காய்வுக் குழுவினராலும் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன. கணக்காய்வு அறிக்கைகள் புத்தக வடிவில் அச்சிடப்பட்டு வழிபடுநர் மகாசபை உறுப்பினர் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. வழிபடுநர் மகாசபையில் உறுப்பினராக இல்லாதவர்கள், இவ்வறிக்கைகளை ரூ. 10/- தபாற்கட்டளை மூலமாக எனக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்) சோ. செல்வரெத்தினம்
பொருளாளர்
நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில்
25-9-1984

## அரசு, வெளிநாட்டு உதவியின்றி
# நடைபெறும் நிறுவனம்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் சீநோர் தனியார் நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்ற கொள்ளை சம்பந்தமாக அந்நிறுவனத்தின் பொது முகாமையாளர் திரு. ஞா. யுகேந்திரன் பின் வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இற்றைக்கு 16 வருடங்களுக்கு முன்னே நோர்வேயிலுள்ள ஒரு பொது சனசமூக சேவை இயக்கத்தின் உதவியுடன் மீனவருக்கு அத்தியாவசியமாக வேண்டிய பொருட்களை உற்பத்திசெய்து அதன் மூலம் நாட்டிலுள்ள பட்டினியைப் போக்க ஸ்தாபிக்கப்பட்டது.

இவ்விஸ்தாபனம் வளர்ச்சியடைந்து பல கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தியது.

இப்பொழுது காரைநகரிலுள்ள கல்நாரிழை மீன்பிடிப் படகு (Fibreglass Fishing Boat) கட்டும் தொழிலகமும், மீன் உணவு தயாரிக்கும் தொழிலகமும், குருநகரிலிருக்கும் மீன்பிடி வலை உற்பத்தித் தொழிலகமும், பனிக்கட்டி-(Ice) உற்பத்தித் தொழிற்சாலையும் சீ-நோர் அபிவிருத்தி தனியார் நிறுவனத்தின் யாழ் பிராந்திய நிறுவனமாக இயங்கி வருகிறது.

இன்றைய நிலையில் இத்தொழிற்சாலைகள் அரசாங்கத்தின் உதவியோ, கட்டுப்பாடோ இன்றி அத்துடன் வெளிநாட்டு நிதியுதவியுமின்றி ஒரு தனியார் ஸ்தாபனமாக, தன்னிச்சையாக இயங்கிவருகிறது.

சீ-நோர் முழுவமைப்பும் ஒரு மத்திய இயக்குனர் சபையுள் இயங்கிய பொழுதும் யாழ் பிரதேச தொழிலகங்கள் அனைத்தும் சுயமாக ஒருவிதக்கட்டுப்பாடோ, உதவியோ இன்றித் திறம்பட இயங்கி வருகின்றன:

கடந்த சில காலங்களில், சீ-நோரைப் பற்றி தப்பபிப்பிராயம் கொண்ட ஒரு சிலரால் சீ-நோர் தனது பொருட்களையும், பணத்தையும் இழக்க நேரிட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், சீ-நோர் பொது முகாமையாளருடைய கார் கடத்திச்செல்லப்பட்டது. இக்கார் 15 மைல் இடைத்தூரத்திற்கப்பால் இருக்கும் இரு தொழிற்சாலைகளைத் தினமும் மேற்பார்வையிட்டு, நன்கு நிர்வகிப்பதற்கு பொது முகாமையாளருக்கு அவசியம் என்ற காரணத்தினலேயே கொடுக்கப்பட்டது.

இதற்கு மேலாக ஞாயிறு இரவு காரைநகர் தொழிற்சாலையிலுள்ள மூல உற்பத்தி பொருளான மீன்பிடி வள்ளங்கள் இரண்டு கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்பட்டது. அத்துடன் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளமாக கொடுப்பதற்கு வைக்கப்பட்டிருந்த பணத்தின் ஒரு பகுதியும் களவாடப்பட்டது.

இச்செயலால் எவ்வுதவியுமின்றித் தனிமையாக இயங்கும் யாழ். பிராந்தியத்தொழிற்சாலைகளுக்குப் பாரிய பண நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்நிலை தொடருமானல் காலக்கிரமத்தில் கிட்டத்தட்ட நேரிடையாக 300 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கித் திறம்பட இயங்கிவரும் இவ்விஸ்தாபனம் குறுகிக் குறுகி மூடவேண்டியநிலை ஏற்படும்.

மேலும் சீ-நோர் தனியார் நிறுவனத்தினலே 1500 க்கு மேற்பட்ட மக்கள் மறைமுகமாக வேலைவாய்ப்பும், நன்மையும் அடைகிருர்கள்.

யாழ். பிராந்தியத்தில் இயங்கும் ஒரேயொரு பாரிய மீன்பிடி உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலை சீ-நோரைச் சார்ந்தவையே. இவற்றில் சேர்ந்து பயிற்சிபெறும்தொழிலாளர்கள் அத்தொழிலில் திறமையெய்தி வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற ஏதுவாயிருக்கிறது.

சீ-நோருக்கு பணக்கஷ்டம் தொடர்ந்து ஏற்பட்டால் இவையனைத்தும் இழக்க நேரிடும். இதனல் நஷ்டம் அடைகிறவர்கள், குறிப்பாகசீ-நோர் தொழிலாளர்களும், அவர்களை நம்பியிருக்கும் குடும்பத்தினரும், பொதுவாகத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் நஷ்டம் அடைய நேரிடும்.

ஒரு காலத்தில் நோர்வே பெருமக்கள், யாழ். பிரதேச தமிழ் மக்கள் நலன் கருதி செய்த தியாகம் வீண்விரயமாகும்.

ஆதலால், யாழ். பிரதேச தமிழ்பேசும் மக்கள் எதிர்கால நன்மை கருதியும், எமது பொருளாதாரம் வளர்ச்சியடைய வேண்டுமென்பதற்காகவும் எமது சீ-நோர் தனியார் அபிவிருத்தி நிறுவனம் தங்கு தடையின்றி முன்னேற சீ-நோரிலிருந்து எடுத்துச் சென்ற கல்நாரிழைப்படகுகளையும், மோட்டார் காரையும் திருப்பித் தந்துதவும்படி மிகப்பணிவன்புடன் வேண்டுகின்ருேம்.

## முல்லைத்தீவு பாடசாலைகளில்
# இளைஞர்கள் விசாரணை!
### பலர் உடனுக்குடன் விடுதலை!

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவுப்பகுதியில்நேற்று முன்தினம் விசாரணையின் பொருட்டு பல இளைஞர்கள் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டனர்.

முல்லைத்தீவு மகாவித்தியலாயம், முள்ளியவளை வித்தியானந்தக்கல்லூரி ஆகியனவற்றிலேயே இராணுவத்தினர் இவ் இளைஞர்களைக் கொண்டுவந்து விசாரித்தனர்.

முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கு நேற்றுக்காலை சுமார் 24 இளைஞர்கள் கொண்டுவரப்பட்டிருந்தனர் இவர்களில் பலர் விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களின்பெற்ருேர்கள்நேற்றுமுல்லைத்தீவுஅரசாங்க அதிபரைத் தொடர்பு கொண்டதோடு அவ்விளைஞர்கள் விசாரணை செய்யப்படும் பாடசாலைகளுக்கு வெளியேயும் பெருமளவில் திரண்டுநின்றனர் என்று கூறப்பட்டது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. ஞானச்சந்திரன் இப்பகுதியில் மக்களிடையே பதட்டம் காணப்படுகிற போதிலும் அமைதிநிலவுவதாகக் கூறினர்

## ஆரம்ப வேலைகள்

[சாவகச்சேரி]

தென்மராட்சி அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தினல், கெற்பேலியில் உருவாக்கப்பட்டுள்ள அகதிகள் குடியேற்றத் திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இங்கு சுமார் 70 அகதிகள் குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளன.

## தொழில் நீதிமன்ற நீதவான்

[சாவகச்சேரி]

வடபிராந்திய தொழில் நீதிமன்றின் நீதவானுக திரு என். பாலசுப்பிரமணியம் ஹட்டனில் இருந்து இடமாற்றம் பெற்றுள்ளார்.

## நவராத்திரி விழா

[சாவகச்சேரி]

தென்மராட்சி திவ்யஜீவன சங்கம் ஏற்பாடு செய்துள்ள நவராத்திரிவிழா சுப்பிரமணிய ஐயர் வீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்விழா தொடர்ச்சியாக எட்டுநாட்களும் ஒவ்வொரு அன்பர்கள் வீடுகளில் கொண்டாடப்படவுள்ளது. விழாக் காலத்தில் விஷேட பூசைகள் இடம்பெறவுள்ளன.

## பல இடங்களில் சோதனை

[மாவிட்டபுரம்]

கிரிமலை, கட்டுவன், மயிலிட்டி பகுதிகளில் ஆயுதப் படையினர் நேற்று சோதனையில் ஈடுபட்டனர் காங்கேசன் துறை பகுதிகளில் பதற்ற நிலைகாணப்பட்டது.

[சு]


நீடிக்கப்பட்டுள்ளது

எஸ்-லோன் வீடுகட்டுவோர் சீட்டிழுப்பு.
பிரத்தியேகமாக எஸ்-லோன் பாவனையாளருக்கு

எமது புதிய வாடிக்கையாளர்களும் சீட்டிழுப்பின் அதிர்ஷ்டத்தைப் பெற...



உங்கள் எஸ்-லோன் பி.வீ.சி. குழாய்களும் இணைப்புகளும் முற்றிலும் இலவசம்!

எஸ்-லோன் வீடு கட்டுவோரின் சீட்டிழுப்பில் உங்களுக்கும், உங்கள் வியாபாரிகளுக்கும், ஏன் உங்கள் குழாய்த்தொழிலாளருக்குமே பரிசில்கள் உண்டு.

இது எஸ்-லோன் பாவனையாளருக்கு மூன்று மாதங்கட்கொரு முறை நாம் தரும்பரிசாகும்.

இதோ எஸ்-லோன் பி.வி.சி குழாய் உற்பத்தியாளர்கள் தரும் ஒரு வெகுமதி.

நீங்கள் செய்யவேண்டியதாவது:

1. உத்தரவுபெற்ற எஸ்-லோன் வியாபாரி எவரிடமாவது சென்று எஸ்-லோன் குழாய்களையும் இணைப்புகளையும் வாங்குங்கள்.

2. அக்கொள்வனவுக்கு ஓர் பற்றுச்சீட்டினையும் அதனை உறுதிப்படுத்தும் ஓர் உறுதிச்சிட்டையும் கேட்டு வாங்குங்கள்.

3. பற்றுச்சிட்டையும் உறுதிச்சிட்டையும் கீழ்க்கண்ட கூப்பனுடன் எமக்கு அனுப்புங்கள்.

நாம் சீட்டிழுப்பு நடத்துவோம். நீங்கள் அதிர்ஷ்டசாலியானல் உங்கள் உறுதிச்சிட்டிலுள்ள முழுத் தொகையையும் ரொக்கமாக உங்களுக்கே திருப்பித் தருவோம். இதன் மூலம், எஸ்-லோன் தயாரிப்புகளை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறுவீர்கள்.

பரிசுகள் இதோ:

பிரிவு அ
ரூ. 5000/- முதல் ரூ. 15,000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு ஆ
ரூ. 2500/- முதல் ரூ. 5000/-வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு இ
ரூ. 2500/- க்குக் குறைந்த கொள்வனவிற்கு 25 பரிசுகள்.

சிறந்த வடிவமைப்புக்கும் வேலைப்பாட்டுக்கும் குழாய்த்தொழிலாளருக்குரிய சன்மானம் ரொக்கம் ரூ 5000/-
வியாபாரிகளுக்கும் பரிசில்கள் உண்டு.

முக்கியம்:
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட் டினதும் அவர்களது விளம்பர முகவர்களான கெரட்ஸ் அட்வரைசிங் தாபனத்தினதும் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பிரஜைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இக்கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்;
எஸ்-லோன் வீடுகட்டுவோரின் சீட்டிழுப்பு,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

பெயர் ____
முகவரி ____
கட்டிடத்தலத்தின் அமைவிடம் ____
குழாய்த்தொழிலாளரின் பெயர் ____
வியாபாரியின் பெயர் ____
முகவரி ____

எஸ்-லோன் குழாய்கள் இணைக்கப்படுவதை நேரிற் சென்று பார்வையிடுவதற்கு மஹாராஜா ஆர்கனைசேஷனின் பிரதிநிதிபொருவருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகிறது.
தேதி ____ கையொப்பம் ____

இன்று பி.வி.சி. குழாய்களுள் முதற் தரமானது எஸ்-லோன்.ஏன்? ____

GARADS

S-lon
நிகர் வேறில்லை

முடிவு திகதி 1984 அக்டோபர் 30
விலை ஒரு மீட்டர் 13.05 முதல்

உற்பத்தியாளர்கள்:
த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

விற்பனை அலுவலகங்கள்:
467, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-12.

விபரங்களை உங்கள் வியாபாரியிடம் பெறுங்கள்.

# யாழ்ப்பாணத்தில் நடந்த பரீட்சை கொழும்பில்!

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் இருந்து ஆங்கில தேசிய தராதரப்பத்திர பயிற்சிநெறியின் இறுதிப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான வாய்மொழிப் பரீட்சை கொழும்பில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகடந்தபலஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலேயே நடாத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு பயிற்சிநெறிகளைப் பூர்த்திசெய்து வெளியேறிய மாணவர்களுக்கு இன்னும் இறுதிப் பரீட்சைகள் நடைபெறவில்லை. ஆங்கில தேசிய தராதரப்பத்திர பயிற்சிநெறியின் பரீட்சை கொழும்பில் நடைபெறுவதன் மூலம் வெளியேறிய மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுது வேறு இடத்தில் நடத்தப்படுமா என்ற கேள்வியும் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

## மீனவர்கள் பாதிப்பு

(புலோலி)

வடமராட்சிப் பகுதிகடலில் தொடர்ந்து கடற்படையினரால் பீரங்கிவேட்டுக்கள் தீர்க்கப்படுவதனால் கடந்த இருமாதங்களாக இப்பகுதி மீனவர்கள் மீன் பிடித்தொழிலுக்குச் செல்ல முடியாமல் பெரும் பாதிப்படைந்துள்ளதாகவும், இம்மீனவர்கள் பெரும்பீதியுடனும் பயத்துடனும் வாழ்ந்து வருகின்றூர்கள்.

அண்மையில் கலாவதி என்ற கர்ப்பிணிப் பெண் பலியாகியுள்ளார். அவரது கணவர் காயங்களுக்குள்ளாகியுள்ளார். எனவே தொடர்ந்தும் இதுபோன்ற நடவடிக்கைகள் ஏற்படா வண்ணம் மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் மீனவர்கள் பயமின்றி மீன்பிடித்தொழிலை மேற் கொள்ளவும் ஆவன செய்ய வேண்டுமென பொலிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ் அரசாங்க அதிபரையும், யாழ். மாவட்ட கடற்றெழில் விரிவாக்க அதிகாரியையும் கேட்டுள்ளது.

## பலே ஆசாமிகள்

[யாழ்ப்பாணம்]

'பிக்பொக்கட்' அடித்ததாகக் கருதப்படும் இருவர் பிடிபட்டு யாழ். பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் பிரதான விற்பனவு நிலையத்தில் வைத்து சந்தேக நபர்கள் இருவரையும் அங்குள்ள ஊழியர்கள் மடக்கிப் பிடித்தனராம்.

மேற்படி விற்பனவு நிலையத்தில் பொருள்கள் வாங்கவந்த பெண்மணி ஒருவரின் கூடைக்குள் இருந்த பேர்ஸ் ஒன்றை பிக்பொக்கட் அடித்தது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இருவரும் பிடிபட வேண்டி நேர்ந்தாம் (மா)

# செய்திச்சிதறல்

## பொருட்காட்சி

(வவனியா)

நொச்சிமோட்டை இளைஞர் சேவை மன்ற யுவதிகளின் அலங்கார கைப்பணி பொருட்காட்சிஅண்மையில் நடைபெற்றது.

## ஓய்வு பெறுகிறூர்

(வவனியா)

வவனியா தபாலகத்தில் கடந்த இருவருட காலமாக பிரதம தபால் அதிபராக கடமையாற்றிய திரு. என். ராஜேந்திரா இம்மாதம் 30ம் திகதியுடன் ஓய்வுபெறுகின்றூர். இவர் 35 வருடகாலம் தபால் தந்தி திணைக்களத்தில் கடமைபுரிந்துள்ளார்.

## பனம் விதைகள்

(வண்ணூர்பண்ணை)

இவ்வருடம் மூன்று லட்சத்து பத்தாயிரம் பனம் விதைகளை நடுவதற்கு பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அம்பாந்தோட்டை முதல் யாழ்ப்பாண மாவட்டம்வரை ஒருலட்சத்து அறுபதினுயிரம் பனம்விதைகளை நாட்டுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதைவிட மன்னூர் மாவட்டத்தில் ஒரு லட்சத்து ஐம்பதினுயிரம் பனம் விதைகளை நடுவதற்கானவேலைகள் இவ்வாரம் முதல்ஆரம்பிக்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் மன்னூர் மாவட்டத்தில் இந்த நடுகை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம்இலங்கை முழுவதும் ஐந்து லட்சம் விதைகளை இச்சபை நாட்டியிருந்தது.

## பரீட்சை பெறுபேறுகள்

(கோண்டாவில்)

தி. டமிடல் அமுலாக்கல் அமைச்சினுல் விசேடசேவை அலுவலர்களின் பதவியை உறுதிப்படுத்துவதற்காக நடத்தப்பட்ட பரீட்சைப்பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இப்பரீட்சையில் தோற்றிய சகலருக்கும் அவர்களுக்குரிய பெறுபேறுகள் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## சுகாதார கருத்தரங்கு

[பண்டத்தரிப்பு]

சங்கானை வடக்கு குடுப்பநல சேவையாளர் பிரிவில் ஆரம்ப சுகாதார கவனிப்பு திட்டத்தின் கருத்தரங்கும், சுகாதாரக் குழுத் தெரிவும் வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. வடலியடைப்பு ப. நோ. கூ. சங்க கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

## நவராத்திரி விழா

[சுன்னுகம்]

கடந்த செவ்வாய்க்கிழமை சூராவத்தை முத்துமாரியம்மன் கோவிலில் நவராத்திரி விழா ஆரம்பமாகியுள்ளது. இதனையொட்டி விஷேச பூஜையும், அபிராமி அந்தாதி பாராயணமும் தினமும் நடைபெற்றுவருகின்றது.

## புதிய நிர்வாகிகள்

[ஊரெழு]

ஊரெழு கலை வாணி சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்தசனிக்கிழமையன்று அதன் தலைவர் திரு.க.வை.தனேஸ்வரன் தலைமையில் ஊரெழு கணேச வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது நடப்பு வருடத்திற்கான புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பின் வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகதெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு.வை.தனேஸ்வரன், உப தலைவர்; திரு.எஸ். முருகேசம்பிள்ளை, செயலாளர்: திரு வ.மெய்யழகன், உப செயலாளர்: திரு சொ.நரேந்திரன், பொருளாளர்கள்: திரு. க.சுதாகரன் கணக்காய்வாளர் திரு.வை.கிருபானந்தா ஆறு உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவு செய்யபபட்டது.

## நிரந்தர நியமனம்

(ஊரெழு)

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தில் சமயா சமய அடிப்படையில் கடமையாற்றி வரும் பாதுகாப்புச் சேவை ஊழியர்களுள் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவிருக்கிறது

இங்கு கடமையாற்றிவரும் ஏற்கனவே அரச பாதுகாப்பு

(7-ம் பக்கம் பார்க்க)


# இன்றும் நாளையும் மட்டும்!

இந்த ஆண்டு இனி என்றுமே இச்சலுகை உங்களுக்கு கிடைக்காததலால்
இவ்அரிய சந்தர்ப்பத்தை நழுவவிட்டு பின் வருத்தப்படாதீர்கள்!

## ஆர்ப்பிக்கோ ஸ்தாபனத்தாரின்

ARPICO

தரத்தில் சிறந்த முத்திரை பதிக்கப்பெற்ற
சகல உருக்குத் தளபாடங்களுக்கும்

## 10% விசேட விலைக்கழிவு 29-09-1984 வரை

அசல் "ஆர்ப்பிக்கோ" முத்திரை பதிக்கப்பட்டுள்ளதா என்பதை பார்த்து வாங்க மறவாதீர்கள்!

● நீண்டகால பாவனைக்கு ARPICO தளபாடங்கள் ●

கொள்ளை மலிவு! விரையுங்கள்.

★ குஷன் வைக்கப்பட்ட
சாப்பாட்டு நாற்காலிகள், சுழலும் கதிரைகள் ரூபா 275-00 — 1500-00 வரை.

★ உருக்கினாலான நீடித்த பாவனைக்குகந்த
சாப்பாட்டு மேசைகள் ரூபா 850-00 — 2200-00 வரை.

★ இன்னும் எத்தனையோ தளபாடங்கள் அத்தனையும் உங்கள் சீதனங்கள்.

★ ★ "ஆர்ப்பிக்கோ" தளபாடங்கள் அத்தனையும் காலத்தால் அழியாத கண்கவர் பொக்கிஷங்கள் ★ ★

யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்கள்

## டிருன்ஸ்லங்கா மாக்கற்றிங் லிமிட்.,

இல. 01, நவீனசந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். போன்: 23027

## றிச்சார்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்.,

69, ஹைட்பார்க் கோணர், கொழும்பு-2 போன் - 25705-6

ஸ்ரீதர் (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - பத்மினி
பேசும்தெய்வம்

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி—மாலினி
சபாஷ்மீனு
29-9-84 முதல் தீ

ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30
ஸ்ரீநாத், ராஜீவ், ஜோதி
ரயில் பயணங்களில்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதியபிரதி.

சாந்தி (யாழ்நகர்)
28—30
10-30, 2-30, 4-45
மட்டும்
Sean Conery CUBA
Action-Packed-Color)

வின்ஸர் [யாழ்.]
தினசரி 10-30, 2-30, 6-15
பாக்கியராஜ், சத்தியகலா, கராட்டிமணி
விடியும்வரை காத்திரு
[கலர்புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
நாகேஷ்
மறைந்த டிங்கிரி கனகரெட்ணம்-
எஸ். தர்மலிங்கம்
ரத்தத்தின் ரத்தமே
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 — 6-45
From 29-9-84
Every lovers should see this film!
Willie games.....
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
THE BURNING

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
சிவாஜி-சாரதா-சுந்தரராஜன்
நடித்த
ஞான ஒளி
இந்தியாவிலிருந்து பிரத்தியேகமாக பெறப்பட்ட புதிய கொப்பி

## ரூபவாஹினி

மாலை
5-30 நாட்டு வளம் (ஆங்கிலம்)
5-35 இசை நிகழ்ச்சி (சிங்களம்]
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
6-15 'பிளாஷ் கோர்டன், கார்ட்டூன் சித்திரம் (ஆங்கிலம்)
6-40 மருத்துவ அறிக்கை
6-55 செய்திகள் (தமிழ்]
7-15 தகவல் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
7-45 பொது அறிவு நிகழ்ச்சி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 போதை வஸ்துக்கள் குறித்து கலந்துரையாடல் (ஆங்கிலம்)
9-00 'சௌத்பசுபிக், திரைப் படம்(ஆங்கிலம்)
9-30 செய்திகள் [ஆங்கிலம்)
9-50 திரைபடத்தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைபடத் தொடர்ச்கி
11-45 நிகழ்ச்சிகள் முடிவு

## 'இன்ரசிற்றி' யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)
கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் காலை புறப்பட்ட 'இன்ரசிற்றி' ரயில் நண்பகல் யாழ்ப்பாணம் புகையிரதநிலையத்தை வந்து சேர்ந்தது.

பின்னர் ஏராளமான பிரயாணிகள் 'இன்ரசிற்றி' மூலம் கொழும்பு சென்றனர். (மா)

## செய்திச்சிதறல்

(8ம் பக்கத் தொடர்ச்சி)
படைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் சிலருக்கு மட்டுமே நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

எதிர் வரும் அக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர நியமனம் பெறவிருக்கும் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்தவாரம் வழங்கப்பட்டன.

## அமெரிக்காவும்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
ஆயுதப்பரிகரணப் பேச்சுக்களைத் தவிர்த்துவருவதைக் கைவிடவேண்டும்.

உலகில் 95 சத வீதமான அணு ஆயுதங்களை சோவியத்தும் அமெரிக்காவுமே வைத்துள்ளன. அணு ஆயுத யுத்தம் ஒன்று மூளுவதானல் இவ்விரு நாடுகளிலுலேயே அது ஏற்படும்.

ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் வைக்கப்பட்டுள்ள சகல அணு ஆயுதங்களையும் இவ்விரு நாடுகளும் அழித்துவிடவேண்டும்'' என்றுர். (கி)

## ஹொங்கொங்...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)
மீது திணிக்ப்படமாட்டா. ஹொங்கொங் சுயஅதிகாரங்களுடனேயே செயல்படும். சர்வதேசஸ்தாபனங்களுடன் சுயமாக தொடர்புகொண்டிருக்க அனுமதிக்கப்படும். சர்வதேச செலாவணிக்கட்டுப்பாடு எதுவும் இங்கு இருக்காது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எதுவிதகட்டுப்பாடுமின்றி முதலீடுகளை ஆரம்பிக்க அனுமதிக்கப்படுவார்கள். மொத்தத்தில் ஹொங்கொங் மீது சீனு ஆட்சியுரிமையை வைத்திருக்குமாயினும் சீனுவின் நேரடி ஆட்சிக்குட்படாத சுயமான ஒருபகுதியாகவே அது விளங்கும். இந்த ஆண்டின் இறுதியிலேயே ஹொங்கொங்கை சீனுவிடம் கையளிக்கும் சம்பிரதாயபூர்வமான ஒப்பந்தம் சீன, பிரிட்டிஷ் தலைவர்களால் செய்துகொள்ளப்படும். (கி)

★

யாழ். விளையாட்டரங்கில் வழங்கப்பட்டு வந்த ஒய்வூதியம் தற்காலிகமாக நேற்று முன்தினம் நிறுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் பெற்ற பலரில் இவர்களும் காணப்பட்டனர்.

★



## சுன்னுகம் கிளை கொள்ளை

[யாழ்ப்பாணம்)
யாழ். ஐக்கிய வியாபாரசங்க சுன்னுகம் கிளையில் இம்மாதம் 10ம் திகதி 8,274ரூபா 74 சதம் கொள்ளையடிக்கப் பட்டதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கிளையில் 15,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டதாக பத்திரிகையில் வெளி வந்த செய்தி தவருனது தென்று இச் சங்க கிளையினர் தெரிவித்துள்ளனர்.

## முதலுதவி பயிற்சிநெறி

[பண்டத்தரிப்பு]
பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலையத்தில் சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் முதலுதவிப் பயிற்சி நெறியொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 20 யுவதிகள் பங்குபற்றும் இப் பயிற்சி நெறியை படையின் யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார் ஒருமாத காலம் இப் பயிற்சி நடைபெறவுள்ளது.

## அடையாளம் தெரியாத சடலம்

(யாழ்ப்பாணம்)
கச்சேரிக்கு முன் பஸ்தரிப்பு நிலையத்தில் இறந்து கிடந்த ஒருவரின் சடலத்தை அரியாலை கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு விஸ்வலிங்கம் சத்திவேல் யாழ். பெரியாஸ்பத்திரி சவச்சாலையில் சேர்ப்பித்தார்.

அடையாளம் காணப்படாத இந்நபரின் மரணம் தொடர்பாக விபரம் ஒன்றும் தெரியவில்லை இந்நபர் அப்பகுதியில் பிச்சைஎடுத்து வந்தவர் என்றும் கூறப்படுகின்றது.

## மாவட்ட போட்டிகள் இன்று

[அரியாலை]
யாழ்ப்பாணம் கல்வி வட்டாரங்களில்நடைபெற்ற பண்ணிசைப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் கலந்து கொள்ளும் மாவட்டப் போட்டிகள் இன்று யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

இப் போட்டிகளை பிரதம கல்வி அதிகாரி திரு வெ. சபாநாயகம் மங்கள விளக்கேற்றி வைப்பார். பிரதம கல்வி அதிகாரி நிர்வாகம் திரு இ. சுந்தரலிங்கமு, சிவதர்ம வள்ளல் க. கனகராசா (ஜே.பி) ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு ஆகியவற்றில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கான பரிசில்களை யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு ம. சிமியாம்பிள்ளை அவர்கள் வழங்குவார்கள்.

### பிரான்ஸிடமிருந்து

## நவீன போர் விமானங்களை இந்தியா வாங்குகிறது!

[புதுடில்லி]
நவீன போர் விமானங்களை பிரான்ஸ் நாட்டிலிருந்து இந்தியா விலைக்கு வாங்கியுள்ளது. இவை மின்னல் வேகத்தில் பாய்ந்து குண்டுகளை வீசி தாக்கும். இவற்றை இந்தியாவிற்கு கொண்டு வருவதற்காக இராணுவ அதிகாரிகள் பிரான்ஸ் சென்றுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டிலிருந்து, நவீன போர் விமானங்களை வாங்கும் ஒப்பந்தமொன்று இந்தியப் பிரதமருக்கும் பிரான்ஸ் நாட்டு அதிபருக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டதையடுத்து இவ்விமானங்களை பிரான்ஸ் வழங்குகின்றது இவ் ஒப்பந்தப்படி 'மிராஜ்' விமானங்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. (கெ)

## கூட்டுத்தாபன 'வான்' கடத்தப்பட்டது!

[யாழ்ப்பாணம்]
பெற்றுேலியம் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாண அலுவலகத்துக்குச் சொந்தமான வான் ஒன்று இனம் தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில், யாழ் மணிக்கூட்டுக் கோபுர வீதியிலுள்ள எரிபொருள் விற்பனவு நிலையத்துக்கு முன்பாகவைத்தே வான் கடத்தப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இனந்தெரியாத மூன்றுநபர்கள் துப்பாக்கிமுனையில் சாரதியைப் பயமுறுத்திவிட்டு கடத்திச் சென்றுவிட்டார்களாம். [மா]

### பாணந்துறையிலிருந்து அகதியாக வந்தவரின் பரிதாப நிலை

## அமைச்சர் 'ராசு'வுக்கு பூசகரின் விண்ணப்பம்!

(கொழும்புத்துறை)
பாணந்துறைக் கந்தசுவாமி ஆலயத்தில் பூசகராகக் கடமையாற்றிக் கடந்த வருடம் ஜூலைக் கலவரத்தின்போது அகதியாகிக் கரணவாய் வந்தவர் இன்று பரிதாபநிலைக்காளாகியுள்ளார்.

பிரம்மஸ்ரீ சு. சுவாமிநாதசர்மா என்னும் ஏழு பிள்ளைசளின் தந்தையான ஆலயப் பூசகருக்கே இவ்அவலநிலை ஏற்பட்டுள்ளது.

பாணந்துறைக் கந்தசுவாமி கோவிலில் இருபது வருடங்களுக்கு மேலாகப் பூசகராகக் கடமையாற்றிய இவர், தனக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை விளக்கி விமோசனம் அளிக்குமாறு பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரையைக் கடிதம்மூலம் கோரியுள்ளார்.

தற்போது கரணவாய் தெற்கில் அகதியாகத் தங்கியுள்ள அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

''1983-ஜூலைக் கலவரத்தின்போது நான் பூசகராகக் கடமையாற்றிய கந்தசுவாமி கோவிலும், நானும் எனது குடும்பத்தினர் வசித்த வீடும் எரிக்கப்பட்டன அப்பயங்கர நிலையில் நானும் மனைவியும், எமது ஏழுபிள்ளைகளும் உயிர் தப்பிப் பாணந்துறையிலுள்ள முஸ்லீம் குடும்பம் ஒன்றினுற் பாதுகாக்கப்பட்டு அவர்களது வீட்டில் இரண்டு கிழமைகள் ஒளித்திருந்தோம்.

பின்னர் தனியார் பஸ் வண்டி மூலம் யாழ்ப்பாணம் வந்து கரணவாய் தெற்கு பிராமண அகதிகள் முகாமில் தங்கியிருந்தோம். இப்போது நாம் தங்கியிருந்த இப்பிராமண அகதிகள் முகாமும் மூடப்பட்விட்டதால் உறவினர் ஒருவரின் வீட்டிலேயே தஞ்சமடைந்து வாழ்க்கை நடாத்த முடியாத அவலநிலையிலுள்ளோம்.

இதனுல் பூசகர் வேலையை நம்பியே வாழ்க்கை நடாத்தும் எமது குடும்பம் உண்ண உணவின்றிப் பட்டினியால் வாடுகின்றது.

## கருகம்பனை ஆலயத்தில் நவராத்திரி

[யாழ்ப்பாணம்]
கருகம்பனை ஸ்ரீ நாக இராஜேஸ்வரி[நாச்சிமார்] ஆலயத்தில் நவராத்திரி விழா தொடர்ந்து விமரிசையாக நடைபெற்று வருகிறது. எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை நவராத்திரி விழாவின் ஆறும் நாள் அன்று பிரபல பெண் எழுத்தாளர் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் ,,அன்பின் வழியது உயிர் நிலை'' என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## அரச ஊழியர் மாதச்சம்பளம்

[யாழ்ப்பாணம்]
யாழ். செயலகத்தில் கடமையாற்றும் சகலஊழியர்களுக்கும், குருநகர் வங்கியில்வைத்து மாதாந்தசம்பளம் வழங்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல யாழ். மாவட்டத்திலுள்ள சகலதிணைக்களங்களுக்கும் குருநகர் வங்கி மூலமே சம்பளம் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. [மா]

# வடபகுதி நீர் விநியோகம்:

## வேலைகளை நிறுத்த வேண்டாமென கோரிக்கை

(கொழும்புத்துறை)

அமெரிக்க நிதியுதவியுடனை வடபகுதி நீர் விநியோகத் திட்ட வேலைகளை நிறுத்த வேண்டாமென்று அரசாங்கத்திடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா - இலங்கை அரசாங்கங்கள், கூட்டாக இந்நீர் விநியோகத் திட்ட வேலைகளை மேற்கொண்டிருந்தன யாழ். 4-ம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள இக்குழாய் நீர் விநியோகத் திட்ட அலுவலகத்தில் அண்மையில் அடுத்தடுத்துக் கொள்ளைகள் நிகழ்ந்ததின் எதிரொலியாக வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நீர் விநியோகத் திட்ட வேலைகள் நிறுத்தப்படக் கூடிய நிலையேற்பட்டுள்ளதைத் தொடர்ந்தே பல பொதுஸ்தாபனங்கள் அரசாங்கத்திற்கு இந்நீர் விநியோகத் திட்ட வேலைகளை நிறுத்த வேண்டாமென்று கோரி மகஜர்களை அனுப்பி வைத்து வருகின்றன.

பருத்தித்துறை, சாவகச்சேரிப்பகுதிகளுக்குக் குழாய் மூலம் நீர் விநியோகம் செய்வதற்காக 12 கோடி ரூபா செலவில் இக்குழாய நீர்விநியோகத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்குழாய் நீர்விநியோகத் திட்டத்தை நிறுத்த வேண்டாமென்று பருத்தித்துறை, சாவகச்சேரிப் பகுதிப் பொது மக்களும், பொது ஸ்தாபனங்களும் அரசாங்கத்திற்கு அவசர மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர். இதுசம்பந்தமாக தூது கோஷ்டியொன்றும் பிரதமர் திரு ஆர் பிரேமதாசாவைச்சந்திட்டு தமது கோரிக்கையை நேரில் சமர்ப்பிக்கவுள்ளது.

---

### கம்யூ; சமசமாஜ, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி பிரதிநிதிகள்

# யாழ். வருகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நடந்த அசம்பாவிதங்களை நேரில் பார்வையிடுவதற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. பீட்டர் கெனமன் இங்கு வரவிருக்கின்றார்.

திரு. கெனமனுடன் சமசமாஜக்கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பிரதிநிதிகளும் வருவார்கள் என்று எதி பார்க்கப்படுகிறது.

திரு பீட்டர் கெனமனுடன் வரும் குழுவினர், பருத்தித்துறை, மாதகல், யாழ்ப்பாணம் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்வார்கள்.

பாதிக்கப்பட்டவர்களையும் இவர்கள் நேரில் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

---

# இப்படியும் நடக்கிறது

இலங்கையின் நான்காவது பிரதமர் திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் நினைவு தினம் நேற்று முன்தினம்ஆகும்.

நேற்றுமுன்தினமிரவு ரூபவாஹினி தமிழ்ச்செய்தியில் முப்பதுசெக்கண்டுகள் எஸ் டபிள்யூ. ஆர். டி. பற்றிய வாழ்க்கைச் சுருக்கம் இடம்பெற்றது.

ரூபவாஹினி.... ஒளிபரப்பா? ஒலிபரப்பா? பண்டாரநாயக்காவின் சாதாரண புகைப்படம் கூட காண்பிக்கப்படவில்லை !

○ ○ ○ ○

**யாழ்.** மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற கத்தோலிக்க யாத்திரைத்தலம் சாட்டி மாதா ஆலயம் என்பது பலருக்கும் தெரியும்.

ஒவ்வொரு வருடமும் இங்கு நடக்கும் திருவிழாவில் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கூடுவதுண்டு.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இவ்வருடத் திருவிழாவில் வழக்கத்தை விட ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தனர். மக்கள் அதிகமாகக் காணப்படும் இடங்களில் அவர்களின் உடமைகள் தவறுவது சகஜம் தான். திருவிழா முடிந்ததும் ''பாஷையூரைச் சேர்ந்த சிறுவனைக் காணவில்லை......சிறுமி அணிந்திருந்த தங்கச் சங்கிலி தவறிவிட்டது. ...''போன்ற அறிவித்தல்கள் தான் வழக்கமாக ஒலிபெருக்கியில் ஒலிக்கும். இதற்கு மாறாக—

அவரின் அடையாள அட்டை..... இவரின் அடையாள அட்டை இங்கே ஒப்படைக்கப்பட்டுள்ளது போன்ற அறிவித்தல்களே ஒலித்தன.

வடக்கில் உயிருக்கு உத்தரவாதம் இந்த அட்டை தானே!

— ஊடுருவி.

---

## மரண அறிவித்தல்

### திரு. ஏ. சி. சோமசுந்தரம்

ஆறுமுகம் சின்னக்குட்டி - சின்னம்மா தம்பதிகளின் மகனும் ஓய்வுபெற்ற புகையிரத கட்டிட மேற்பார்வையாளருமான ஏ. சி. சோமசுந்தரம் அவர்கள் 27-9 84 வியாழக்கிழமை காலமானார். இவர் சின்னத்தங்க அம்மாளின் அன்புக் கணவரும், ஏ; சி. மாணிக்கம், ஏ. சி. கந்தசாமி, திருமதி வி. எஸ். கந்தையா ஆகியோரின் சகோதரரும், தங்கரத்தினம், தனலக்சுமி, தங்கமலர், சுந்தரலிங்கம், யோகாம்பிகை, சோதிலிங்கம் ஆகியோரின் அன்புத் தகப்பனும், பேரின்பராஜா, தெய்வேந்திரராஜா, ராஜகஸ்தூரி, வைதீஸ்வரன், சரஸ்வதி, சாந்திகுமாரி ஆகியோரின் அன்பு மாமனும், அமுதமலர், சுகந்தமலர், மணிவண்ணன், சிவராஜ், முரளீதரன், அருணராஜ், சித்ரா, சுபத்ரா, சுசித்ரா, யசோதரா, சிவபாலன், சுதாகரன், சசிகரன் சுமித்ரா, விஜிதா, முகுந்தன், ஜெய்பிரியா, ஜெயபிரபா, ராஜினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக து. வைதீஸ்வரன், சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் என்னும் முகவரியிலிருந்து 29-9-84 சனிக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 2001

---

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கந்தசாமி

(முரசுமோட்டை)



அல்வாய் தெற்கைச் சேர்ந்த சு. கந்தசாமி காலமானார். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், நாகரத்தினம். சிவபாதசுந்தரம் (தம்பி), கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீசிவசங்கரநாதனின் அன்பு மாமனும், ஸ்ரீபிரசன்ன, ஸ்ரீபிரதீபன், தர்ஷிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் அல்வாய் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரிகைக்காக பருத்தித்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை, உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

1992 சி. முத்துத்தம்பி

---

### கிராமம் கிரா[illegible]..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று முல்லைத்தீவு திரும்புவார் என்று கச்சேரி வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

---

### பல மணி நேரம் தாமதித்து வந்த யாழ். தேவி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்ட யாழ். தேவி ரயில் நேற்று மாலை 6-30 மணிக்கே யாழ். புகையிரத நிலையத்தை வந்தடைந்தது

என்ஜினில் தீ பிடித்தமையினாலும், கல்கமுவவிற்கு அண்மையில் ஒருவரை மோதியதினாலுமே இத்தாமதம் ஏற்பட்டதாக கூறப்பட்டது.

இந்த யாழ். தேவி ரயில் நேற்று மாலை 7 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு திரும்பியது. [வெ]

---

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். திட்டமிடல் பணிமனையும், கோப்பாய் அரசாங்க அதிபர் பிரிவின் அபிவிருத்தி அலகும் மகளிர் விவகார அமைச்சு சார்பாக நடத்தும் மகளிர் பயிற்சி இன்று புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறும்.

---

### மணிஓடர் விவகாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் நேற்று மணிஓடர்கள் மாற்றிக்கொடுக்கப்பட்டன.

சில நாட்களாக மணிஓடர்கள் மாற்றுவது இங்கு நிறுத்தப்பட்டிருந்தது. (க)

---

### ஓய்வூதியம் பெறஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் ஓய்வூதியம் வழங்குவது நேற்று முன்தினம் முதல் முடிவடைந்தது

இங்கு ஓய்வூதியம் பெறத் தவறியவர்களுக்கு அந்தந்தப் பகுதித் தபால் நிலையங்களில் ஓய்வூதியம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தபாற்கந்தோர் அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

---

## முன்னாள் எம். பிக்கு 5 வருட ஒத்திவைப்பு சிறை

(கொழும்பு) [illegible] கடத்தல் [illegible] வழக்கொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஹேவாஹெட்ட தொகுதியின் முன்னாள் எம். பி. அநுரா டானியலுக்கு 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும், 10,000 ரூபா அபராதமும் கோட்டை நீதவானால் விதிக்கப்பட்டது.

தங்கப்பாளங்கள், கைக்கடிகாரங்கள், ஆடைகளைக் கடத்தியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இக்கடத்தல் பொருட்களின் பெறுமதி 20 லட்சத்து 78,000 ரூபாவாகும். (வெ)

---

### யாழ். இந்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆய்வு கூடத்தில் இனம் தெரியாத நான்கு துப்பாக்கி இளைஞர்களினால் பெறுமதி மிக்க இரசாயனப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் பாடசாலையின் மேல் மாடியில் சரஸ்வதி பூசை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் கீழ்ப்பகுதியில் இருக்கும் ஆய்வு கூடத்தில் நுழைந்த இளைஞர்கள் ஆய்வு கூட உதவியாளர்வி.சோமசுந்தரத்தை பயமுறுத்தி மேற்படி பொருட்களை எடுத்துச் சென்றனராம்.

இது தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (சூ)

---

### சம்பள உயர்வு

[பண்டத்தரிப்பு]

அரசாங்க மருந்துவக் கலவையாளர்களுக்கு [டிஸ்ப்பென்சர்கள்] சம்பள அதிகரிப்புவழங்குவதற்கான சுற்றறிக்கையொன்றை கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு சகலபிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகங்களுக்கும் இவ் வாரம் அனுப்பி வைத்துள்ளது.

மருத்துவ கலவையாளர்கள் சேவைதரம் பிரிக்கப்பட்டு புதியசம்பளத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பள அதிகரிப்பு 1983ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம்திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று இச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது சேவை தரம் பிரிக்கப்பட்டு புதிய சம்பளத் திட்டம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் என்று அரசாங்க மருத்துவக்கலவையாளர்கள் சங்கம் நீண்ட காலமாக சுகாதார அமைச்சிடம் கோரிக்கை வித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

---

## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் செல்வராஜா

கனகரத்தினம் செல்வராஜா (இளைப்பாறிய லிகிதர் - கொழும்பு கச்சேரி) சிவபதமடைந்துவிட்டார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், கிரிஜா, கிருபாவின் அன்புத் தந்தையும், சிவசுப்பிரமணியம், திருஞானத்தின் மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை 28-09-84ம் தேதி 1 மணியளவில் 2/1 சிவப்பிரகாசம் வீதி, ஐயனார் கோவிலடியிலிருந்து கோம்பையன்மணல் மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

அறிவிப்பவர்

2002 ஆ. நவரத்தினராஜா

---

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம். சிவன்கோவில் மேற்கு வீதி, 6ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.